# ஜாமக்காரன்


VOLUME - 1 ISSUE - 2

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com

WATCHMAN





**கர்த்தருக்குள் அன்பானவர்களுக்கு,**

இயேசுகிறிஸ்துவின் சமாதானம் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் நிறைந்திருப்பதாக.

## நீதிபதிகள் மற்றும் வழக்குறைஞர்கள்

சில மாதங்களாகவே இந்தியாவிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலும் **நீதிபதிகளும்-வக்கீல்களும்** பயங்கர போராட்டம் பேசக்கூடாத வார்த்தைகள், பத்திரிக்கை செய்திகள் மூலமாகவும், டிவி மூலமாகவும் கேட்டபோது பொதுமக்களை அந்த வார்த்தைகள் மிகவும் வேதனைக்குள்ளாக்கி இருக்கிறது.

உலகமனைத்திலும், நம் இந்தியாவிலும் மக்களின் கடைசியாகவும் ஒரே **நம்பிக்கையாகவும் இருப்பது நீதிமன்றங்கள்தான்.** எல்லா மதத்தினரும் தங்கள் மத சம்பந்தமான பிரச்சனைகளுக்கும், தங்கள் மத தலைவர்களிடம் நீதி கிடைக்காததால் அவர்கள் நீதி தேடி நம்பிப்போவது **நீதிமன்றம்தான்.** அப்படிப்பட்ட நீதிமன்றத்தில் **நீதிபதிகள்** எவ்வளவு முக்கியமோ அந்த அளவு **வழக்குறைஞர்களும்** முக்கியமானவர்களே! வழக்குறைஞர்கள் இல்லாமல் நீதிபதிகள் நீதிமன்றத்தில் இருந்தும் பிரயோஜனமில்லை- அப்படியே **வழக்குறைஞர்களும், நீதிபதிகள் இல்லாமல்** தனியே இயங்கமுடியாது.

காவல்துறைமீது நம்பிக்கையில்லை- காவல் துறையிலும் நியாயம் ஒரு பட்சமாக இருக்கிறது. நியாயம் கிடைப்பதில்லை. மாவட்ட ஆட்சிதலைவர் (கலெக்டர்), அமைச்சர்கள், முதல்வர், ஆளுனர் (கவர்னர்), **பிரதம மந்திரி, இந்தியாவின் தலைமகன் ஜனாதிபதி** ஆகிய அனைத்து உயர்அதிகாரிகளும் கொடுக்கமுடியாத நம்பிக்கையை தீர்ப்பை, கட்டளையை, நிர்வாக சீர்அமைப்புபோன்ற நாட்டின் அனைத்து பிரச்சனைகளுக்கும் **நீதிமன்றதீர்ப்பே** முடிவானது. நாட்டிலேயே மிக உயர்ந்த பதவியில்உள்ள தேசத்தின் **ஜனாதிபதிக்கு** உச்சநீதிமன்றம் அவரை நியாயம் தீர்க்க, தண்டனையளிக்க இந்தியாவிலேயே மிக உயர்ந்த அதிகாரம் பெற்றது நீதிமன்றமாகும்.

ஆகஸ்ட் 2016

**அப்படிப்பட்ட நீதிமன்றம் இப்போதைய வக்கீல்களின் போராட்டத்தால் செய்வதறியாது முள்ளில்போட்ட துணியைப்போல முள்ளிலிருந்து துணி கிழியாமல் எடுக்க பல கோணங்களில் சிந்திக்கிறது. இரும்புகரம் கொண்டு போராட்டத்தை நீதிமன்றம் அடக்கமுடியும். ஆனால் அப்படி செய்ய தயங்குவதற்கு பல காரணங்கள் இருக்கிறது. அவைகளை நான் கூறவிரும்பவில்லை.**

**ஆனால் வாசகர்களுக்கு ஆசிரியர் குறிப்பாக வழக்கமாக எழுதுவதுபோல் வேத வசனத்தை குறித்து எழுதாமல் நீதிமன்றத்தின், வக்கீல்களின் இப்போதுள்ள ஆரோக்கியமற்ற சூழ்நிலை நீயா! நானா! என்பதான கௌரவ பிரச்சனையாக மாறாமல் சுமுகமாக தீர்க்கப்பட நாம் யாவரும் சேர்ந்து நீதிபதிகளுக்காகவும், வக்கீல்களுக்காகவும் இந்த போராட்டத்தால் தேங்கி கிடக்கும் வழக்குகளின் தீர்ப்பை எதிர்நோக்கும் ஏழை மக்களுக்காகவும், நீதிக்காக ஏங்கும் குற்றமற்றவர்களுக்காகவும் ஜாமக்காரன் வாசகர்கள் முழு இரவு ஜெபங்களிலும், உபவாச ஜெபங்களிலும், குழுவாக, சபையாக ஜெபிக்க மிக அவசர வேண்டுகோளாக அறிவிக்கிறேன்.**

**ஒருவேளை போராட்டங்கள் சுமுகமாக தீர்க்கப்பட்டாலும் போராட்ட நேரத்தில் பேசப்பட்ட வார்த்தையின் காயங்கள் தற்கால தண்டனை அனுபவித்த வக்கீல்களின் கோபங்கள் வெறுப்புகளின் பிரதிபலிப்பு இனிவரும் நாட்களில் நீதிமன்ற வாதங்களிலும், நீதிபதிகள் அவற்றை கையாள்வதிலும் காணலாம்.**

**அது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஆரோக்கியமற்ற சூழ்நிலையை உண்டாக்கும்.**

**கர்த்தரின் நாமத்துக்கு மகிமை உண்டாவதாக.**

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர். புஷ்பராஜ்**

## வெளிநாட்டு வாழும் வாசகர்கள் கவனிக்கவும்:

‘ வெளிநாட்டுக்கு அனுப்பும் ஜாமக்காரன் பத்திரிக்கையின் ஸ்டாம்ப் விலை மிக அதிகமானதால் ஒரு ஜாமக்காரனுக்கு 51ரூபாய், 64 ரூபாய் என்று ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருப்பதால் கம்பியூட்டர் வைத்திருப்பவர்கள் உங்கள் ஜாமக்காரனை PDFல் பெற்றுக்கொண்டு அதை டவுன்லோட் செய்து வீட்டில் உள்ள யாவரும் வாசிக்கவும். மற்றவர்களுக்கும் காப்பி எடுத்து உதவவும் வேண்டுகிறேன். ஆகவே எங்கள் **இமெயில்க்கு ஜாமக்காரனை அனுப்பவும்** என்று எங்களுக்கு எழுதினால் போதும். உங்கள் இமெயில் ஐடியை நாங்கள் குறித்துக்கொண்டு ஜாமக்காரனை **அச்சகத்துக்கு அனுப்பும் முன்பே** உங்களுக்கு **PDF வழியாக** பெற்றுக்கொள்ளலாம்.

‘ இதன்மூலம் லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு ஸ்டாம்ப் வாங்க செலவு செய்யாதபடி **எங்களுக்கு நீங்கள் உதவலாம்.** மற்றவர்களுக்கும் **ஜாமக்காரன்** தேவையானவர்களுக்கும் இதை அறிவியுங்கள்.

‘ இவ்விஷயத்தில் உங்கள் ஒத்துழைப்பை மிகவும் நாடுகிறேன். வெளிநாட்டில் ஜாமக்காரன் வாசிப்போர் எண்ணிக்கை **மிகவும் அதிகமாக** பெருகிவிட்டது. ஒத்துழைக்கவும். நன்றி.

# அந்நியபாஷை குழப்பம்

# அத்தியாயம் - 5

**அன்னிய பாஷை** சபை மக்களுக்கு அவசியம் தானா? என்ற கேள்வியோடு என் விளக்கத்தை எழுதி, **பெந்தேகோஸ்தே** சபை உபதேசத்தை சார்ந்த **படித்த பட்டதாரிகள்.** கல்லூரி **விரிவுரையாளர்கள், பாஸ்டர்கள்,** பெந்தேகோஸ்தே **சபை எழுத்தாளர்கள் அன்னிய பாஷை** பேசும் பிரபல **ஊழியர்கள்** ஆகியோர்களை நானே நேரில் சென்று சந்தித்து பேசினேன். அதன்பின் நான் **அன்னிய பாஷையை** குறித்து மக்கள் மத்தியில் எழும் என் கருத்துக்களுக்கும் உங்கள் விளக்கத்தை **கடிதம் மூலம்** எனக்கு எழுத வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். பலர் உடனே எனக்கு விளக்கங்களையும், தங்கள் கருத்துக்களையும் எழுதி என்னை மதித்து நேரம் ஒதுக்கி **நீண்ட விளக்கங்களை** எழுதினார்கள். அப்படி எழுதிய யாவருக்கும் கிறிஸ்துவின் நாமத்திலும், ஜாமக்காரன் சார்பிலும், என் சார்பிலும் நன்றி கூறுகிறேன்.

கடந்த சில மாதங்களாக (TPM) சிலோன் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டரும், பெந்தே கோஸ்தே சபை கன்வென்ஷன் பிரசங்கியாருமான **பாஸ்டர் ராஜன்** அவர்கள் எழுதிய கடிதத்துக்கும், (AOG சபை) **அசெம்பிளி ஆப் காட்** சபை முன்னாள் பிஷப்பும் மதுரை AOG சபை பாஸ்டரும் AOG சபை வேதாகம கல்லூரி புரோபஸரும், கன்வென்ஷன் பிரசங்கியாருமான **பாஸ்டர் ராஜாமணி** அவர்கள் எனக்கு எழுதிய கடிதங்களுக்கு நான் விளக்கம் அளித்தேன். அதை வாசகர்கள் யாவரும் வாசித்தீர்கள். சில குறிப்பிட்ட உபதேசத்துக்கு நான் விளக்கம் கூறி அதற்கு பதில் அளிக்கும்படி சவால் விட்டு நான் குறிப்பிட்டு எழுதிய வசனத்தில் எங்காவது தவறான உபதேசம் எழுதப்பட்டுள்ளதா? என கேட்டு எல்லா AOG சபை பாஸ்டர்களுக்கும் சவால்விட்டு பதில் எழுதும்படி கேட்டேன். ஒருவராலும் என் கேள்விக்கு பதில் கூற இயலவில்லை.

எனக்கு கடிதம் எழுதிய மற்ற இரண்டு நபர்களின கடிதங்களுக்கு பதில் எழுத போகிறேன்.

1. **Dr. T.S. Rajasekar,**

   SABC ( Bible College) Lacturer, Bangalore

2. Bro. R. Stanly, (BYM.) Vellore

இவர் BYM ஸ்தாபகரும் மிஷனரி ஸ்தாபனத்தின் நல்ல வேதாகம ஆசிரிய பாண்டித்துவமும் பெற்றவர் ஆவார்.

▣ 1. Dr. T.S. Rajasekar,
SABC Lacturer,
Bangalore

இவரின் வேதாகம கல்லூரிபடிப்பின்அறிவு, **அன்னிய பாஷை** உபதேசத்தில் வேதவசன அடிப்படைக்கொண்டதல்ல. இவர் ஒரு வேதாகம கல்லூரி ஆசிரியராக இருந்தும் அடிப்படை வேத படிப்பறிவு இல்லாதவர்போல் தெருவுக்கு நான்கு சில்லறை பெந்தேகோஸ்தே சபைகளின் வேதாகம படிப்பு இல்லாத பாஸ்டர்கள் பேசுவது போல இவரும் தான் எழுதிய கடித்ததில் கட்டுரையை எழுத ஆரம்பித்த விதமே அப்படி அவரைப்பற்றியும், வேதாகம படிப்பைப்பற்றியும் சந்தேகம் கொள்ளத்தோன்றியது மிகவும் துக்கமான ஒன்றாகும். இவர் தன் கடிதத்தில் ஆரம்பத்திலேயே இப்படி எழுதுகிறார்.

**பரிசுத்த ஆவியின் நிறைவு இரண்டாம் ஆசீர்வாதம் அல்ல.** அப். 2:38, 39ன்படி தேவனிடம் திரும்பும் **ஒவ்வொருவருக்கும் உரிய வாக்குத்தத்தம்** ஆகும். இதை பெற பரிசுத்த ஆவியினால் பாவ உணர்வுபெற்ற ஒவ்வொருவரும், தங்கள் பாவ வாழ்வை வெறுத்து, தேவனிடம் மனம் திருப்பி இயேசு தங்கள் பாவத்திற்கு மரித்ததை விசுவாசித்து, அறிக்கையிட்டு, வேத வசனத்தின்படி தண்ணீரில் திருமுழுக்கு பெற்று, பின் **தேவனிடம் பரிசுத்த ஆவியை கேட்டும்போது** தேவன் இயேசுவின் மூலம் **ஆவியின் அச்சாரத்தை** நமக்கு தந்து நம்மை தம் பிள்ளைகளாகவும் சுதந்திரவாளிகளாகவும் ஆக்குகிறார். **வெறுமனே பாவத்திற்காக வருந்துவதோ** இயேசுவை இரட்சகர் என்று சொல்வதோ மாத்திரம் **மறுபடியும்பிறந்தது ஆகாது! அது குறை பிரசவம் ஆகும்.** மேலே நீங்கள் வாசித்தபடி இவர் தன்கடிதத்தை தொடங்குகிறார். **பரிசுத்த ஆவியானவரை நாம் தான் கேட்கவேண்டும்** அப்போதுதான் இயேசுவின் மூலம் அது கிடைக்கும் என்கிறார். இதற்கு இவர் வேத வசனம் எதையும் மேற்கோள்காட்டவில்லை. மேலும் இவர் **அன்னிய பாஷை** அடையாளம் என்பது சிலர் கூறுவதைப்போல் வேதத்தில் வெறும் **மூன்று** இடத்தில்தானே சொல்லப்படுகிறது. மற்ற இடங்களில் சொல்லப்படவில்லையே! அதனால் அன்னிய பாஷையை நாம் ஏற்க முடியாது என்று மற்றவர்கள் கூறுவது சரியல்ல என்கிறார். எருசலேம், சிசேரியா, எபேசு அகிய இடங்களில் வெவ்வேறு இனத்தவருக்கு **ஒரே மாதிரியான அனுபவம்** நேரிட்டதை வேதம் தெளிவாக குறிப்பிடுவதே இந்த அன்னிய பாஷை **அனைவருக்கும் உரியது** என்பதை காட்டுகிறது என்று எழுதுகிறார்.

## டாக்டர் புஷ்பராஜ் பதில்

▣ கட்டுரையை எழுதிய பெங்களுர்(SABC) கல்லூரி ஆசிரியர்அவர்கள் மேலே குறிப்பிட்ட அனுபவங்களின் **பின்னணியையோ** சூழ்நிலையையோ, அவைகளில் **கர்த்தரின் நோக்கங்களையோ** இவர் படிக்கவில்லை, அல்லது இவைகளை ஆராய விரும்பவில்லை என்று தெரிகிறது. அதனால்தான் 3 இடங்களில் அன்னிய பாஷை பேசப்பட்ட அனுபவம் **எல்லாருக்கும் உரியது** என்கிறார். இது மிக மிக தவறான கருத்து ஆகும்.

இவர் குறிப்பிடும் மூன்று இடங்களின் காணப்பட்ட அனுபவத்தில் சிலர் **தீர்க்கதரிசனம்** சொன்னார்கள், சிலர் **தேவனை புகழ்ந்தார்கள், வெவ்வேறு பாஷைகளை** பேசினார்கள் என்று எழுதியிருக்கிறது. ஆனால் சகோ ராஜசேகர் கூறுகிறார் தேவனுடைய உற்சாகமான ஆவி,

இரட்சிப்பின் சந்தோஷம் நம்மை நிரப்பும்போது நம் உதடுகள் தானே திறக்கப்பட்டு அவருடைய புகழை இரகசியத்தை, செய்தியை நாம் **அன்னிய பாஷை வழியாக நாம்** பேசுகிறோம் என்றார். மேலும் பரிசுத்தாவியானவரால் நிரப்பப்படும் ஒவ்வொருவரும் **அன்னிய பாஷை பேச வேண்டும்** என்று கட்டளையிடுவதுபோல இவர் எழுதியிருக்கிறார். அதோடு யாராவது ஒருவர் அன்னியபாஷை பேசுபவர்களைப் பார்த்து **நீங்கள் பேசும் பாஷைக்கு அர்த்தம் என்ன?** அதை அறிவுபூர்வமாக **விளக்கு** என்று கேட்பது, **குணமாக்கும் வரம் பெற்ற** ஒருவரை பார்த்து நீங்கள் ஜெபித்து சுகமாக்கிய இந்த வியாதியின் **கிருமிகளை** எப்படி அகற்றினாய்?

நீ எப்படி அவருக்கு சுகம் கொடுத்தாய்? அதை **விஞ்ஞான பூர்வமாக நிரூபி** என்று கேட்பதற்கு ஒப்பாகும் என்கிறார். இவர் எழுதுவது எத்தனை அர்த்தமற்ற பதிலாகும். வேத வசனமே அறியாதவர்களிடம் பேசுவதுபோலவும் இருக்கிறது அல்லவா!

ஆகவே இவர் அனுபவத்தின் அடிப்படையில் அன்னியபாஷை பேசுகிறவர்களை பார்த்து **எப்படி இந்த பாஷைகளை** பேசினாய் என்பதை நிரூபி என்று அவர்களிடம் கேள்வி கேட்கக்கூடாது என்கிறார்! அவர்களால் விளக்கமும் கொடுக்கமுடியாது என்கிறார். 1 கொரி. 14:1ல் ஆவியினாலே **இரகசியங்களை** தேவனிடத்தில் பேசுகிறவன் தனக்கு பக்தி விருத்தி உண்டாக பேசுகிறான் என்பது வேதம் கூறும் தகுதி. இதில் **இரகசியத்தை** ஏன் தேவனிடம் பேச வேண்டும் ? என்றோ! தனக்கு **புரியாததை பேசுவதில்** எப்படி **பக்தி விருத்தி** உண்டாகும் என்பதை வேதம் அறிவுபூர்வமாக விளக்காததால் நாம் அதை **அப்படியே ஏற்றுக்கொள்வது தான் சரியானது** என்று வேதாகம கல்லூரி ஆசிரியர் திரு.ராஜசேகர் அவர்கள் அர்த்தமில்லாமல் எழுதியுள்ளார். இது சிறு பிள்ளைகளின் பதில்போல் இருக்கிறது.

ஒரு வேதாகம கல்லூரி ஆசிரியருக்கு ஒரு வேத வசனத்தை விளக்கி கூற முடியவில்லை என்றால்! கல்லூரியில் மற்ற விஷயங்களை மாணவர்களுக்கு எப்படி கற்பிப்பார்!

**யாராவது புரியாத அந்நியபாஷை பேசினால்** அதை குறித்து **கேள்வி கேட்க கூடாது** என்கிறார். புரியாத பாஷை பேசினலும் **அதன் மூலம் பக்தி விருத்தி** உண்டாகும் என்கிறார். இது எவ்வளவு முட்டாள்தனமான பதிலாக இருக்கிறது.

**பக்தி விருத்தி** வேத **வசனத்தினால் மட்டுமே** உண்டாகும் என்பது **கிறிஸ்தவ வேத வசனத்தின் ஆரம்ப பாடம்** ஆகும்.

இந்த அடிப்படையே இவர்களுக்கு தெரியவில்லை. இவர்கள்பேசும் **அன்னிய பாஷையைப்**பற்றி இவர்களுக்கே **ஒன்றும் விளங்காமல்** உளறிக்கொண்டிருக்கிறார்கள் என்பது இவர் கடிதம மூலம் உறுதியாகிறது.

இதன்மூலம் இவர்களைப்பற்றியும் இவர்கள் ஆராதிக்கிற **பெந்தேகோஸ்தே சபை** மக்களின் ஆவிக்குறிய வளர்ச்சியைப் பற்றியும் சந்தேகம் வருகிறதே !

அவிசுவாசிகளின் சபை என்று இவர்கள் குறிப்பிடுகிற சபைகளைவிட இவர்கள் சபை மிக மோசமான நிலையில் காணப்படுகிறது என்பது மிக தெளிவு.



# BLESSING YOUTH MISSION

(A RegisteredReligious & Charatable Society)
P.O. Bag No. 609, 42943, 42828 Telegram : Blessing

**R. STANLY**
Founder & General Secretary

February 1997

அன்புள்ள சகோதரனுக்கு,

கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். 1997 பிப்ரவரி 17ம் தேதி நீங்கள் எனக்கு எழுதிய கடிதம் கிடைத்தது..... ஒரு வாரத்திற்கு முன்தான் நீங்கள் எழுதிய கட்டுரை முழுவதும் வாசிக்க நேர்ந்தது. ஆனால் வெளியே ஆங்காங்கு ஜாமக்காரனில் உங்கள் எழுத்தால் ஏற்பட்ட சலசலப்புகள் என் காதிற் கேட்டன...

1963ம் வருடம் முதல் இன்று வரை எனது **சுய பத்தி விருத்திக்காக** இக்கிருபா வரத்தை பயன்படுத்தி வருகிறேன். இதில் எவ்வித மாற்றமுமில்லை.

பெந்தேகோஸ்தே அல்லாத வட்டாரங்களில் அன்னிய பாஷையைக்குறித்து வெளிவந்துள்ள பல புத்தகங்களையும் நான் இவ்வனுபவத்தைபெற்ற ஆண்டுமுதல் ஆங்காங்கே வாசித்தும் வந்திருக்கிறேன். இரு **திறத்தாரின்** வியாக்கியானங்களிலும் **சரியானவைகளும் உண்டு. பிழையானவைகளும் உண்டு** என்பது எனது கருத்தாகும்.

வரங்களைப்பற்றிய வியாக்கியானம் எழுதப்பட்ட அத்தியாயங்களின் முடிவில் அப்போஸ்தலன் பவுல் **நமது அறிவு குறை உள்ளது** என்று உண்மையாய் எழுதிய வார்ததைகளுக்கு இந்நிலை நிரூபணமாகும்.

உங்கள் சகோதரன்.
**R. ஸ்டான்லி**

**குறிப்பு:** சகோ R.ஸ்டான்லி (BYM Vellore) அவர்கள் இப்போது BYM மிஷனரி ஸ்தாபனத்திலிருந்து ஓய்வுபெற்று. இப்போது வேதாகமம் படிப்பித்து கொடுத்தல் Bible Teaching என்ற அருமையான ஊழியத்தை செய்துக்கொண்டிருக்கிறார்.

இவ்வருட ஆரம்ப மாதங்களில் **Dr.புஷ்பராஜ் ஆகிய நான் இக்கட்டுரையை ஜாமக்காரனில்** நான் எழுதி குறிப்பிட்டதுபோல அன்னிய பாஷை விஷயமாக **நானே நேரில் சென்று சந்தித்த** பெந்தேகோஸ்தே சபை ஊழியர்கள் பாஸ்டர்களில் சகோ. ஸ்டான்லி அவர்கள் நல்ல விசுவாசியும், பிரபல பிரசங்கியாரும் ஆகும். பெந்தேகோஸ்தே சபைகளில் உள்ள வேத பண்டிதர்களில் இவரும் ஒருவர். இருதய ஆப்பரேசன்முடித்து ஓய்வு பெற்றுக்கொண்டிருந்த நிலையிலும் நான் இவர் வீடு தேடி சென்றபோது எனக்கு மரியாதை கொடுத்து **அன்னிய பாஷைகளைக்**குறித்து சுமார் 1மணி நேரத்துக்குமேல் நாங்கள் இருவரும் பகிர்ந்துக் கொண்டோம். அதன்பின் **அன்னியபாஷைப்பற்றி** நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க **கடிதம் மூலம்** தன் விளக்கத்தை ஜாமக்காரன் வாசகர்களுக்காக எழுதியுள்ளார். இக்கட்டுரையை எழுதிய **சகோ.ஸ்டான்லி** அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

▣ **சகோ ஸ்டான்லி** எழுதிய கட்டுரையிலிருந்து குறிப்பிட்ட **பிரச்சனைக்குரிய** விஷயங்களைமட்டும் நான் **தெரிந்தெடுத்து** அவைகளுக்கு என் விமர்சனங்களையும் என் **விளக்கத்தையும்** எழுத விரும்புகிறேன்.

**அன்னிய பாஷை அவசியம் தானா?** என்ற தலைப்பில்தான் சகோதரன் தான்எழுதிய கட்டுரையை பதிவுசெய்கிறார்.

சகோ ஸ்டான்லி அவர்கள் இக்கட்டுரையை ஆரம்பிக்கும்போது முதலில் குறிப்பிட்ட வசனம் (அப். 2:7, 8-12) **இதோ பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க நம்மில் அவரவருடைய சொந்த பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி இதென்னமாய் முடியுமோ ?** இப்படி இந்த வசனத்தை ஆரம்ப வசனமாக குறிப்பிட்டு இதை விவரிக்கும்போது **வேத வசனத்தில் இல்லாத** பெந்தேகோஸ்தே சபையினருக்கே உரிய உபதேச பழக்கத்தை குறிப்பிடுகிறார்.

= 120 சீடர்களும் கிறிஸ்துவின் கட்டளைக்கிணங்கி **துதியோடும், விண்ணப்பத்தோடும் காத்திருந்ததால்** அவர்கள்மேல் **பரிசுத்த ஆவியானவர்** இறங்குவதுபோல தன் கட்டுரையில் சித்தரிக்கிறார்.

அப். 2ல் எந்த வசனத்திலும் **துதியோடும் விண்ணப்பத்தோடும்** சீஷர்கள் காத்திருந்ததாக எழுதப்படவேயில்லை! இது **கைதட்டி** துதித்தால் பரிசுத்தாவி இறங்கும் என்ற தவறான எதிர்ப்பார்பில் சபையில் உள்ள விசுவாசிகள் தங்கள் கைகள் நோக **கைதட்டி** பரிசுத்தாவியை பெற கடும் முயற்சி செய்கிறார்களே ! அப்படி எல்லாரும் செய்யும்படி வாசிக்கிவர்களை தூண்டுவது போல் இவர் எழுத்து இருக்கிறது.

▣ பொதுவாக எல்லா பெந்தேகோஸ்தே சபைகளிலும் **எரிகோ** மதிலை ஏழுமுறை சுற்றிவந்து **உரத்த சத்தமாய் துதித்ததினால்**தான் எரிகோ மதில் இடிந்து விழுந்தது என்று தவறாக உபதேசிப்பதை கேட்டிருக்கிறேன். பெந்தேகோஸ்தேகாரர்கள் வசனத்தை எப்படி அவர்களுக்கு சாதகமாக திரித்து கூறுகிறார்கள என்பதை கவனிக்கவும். **வேதம்கூறுகிறது, எரிகோ மதிலை**சுற்றி வந்தபின் மக்கள் **ஆர்ப்பரித்தார்கள்** என்றுதான் எழுதியுள்ளது. ஆனால் இவர்கள் எல்லோரும் **துதித்தார்கள்** என்று **சொந்த வியாக்கியானம்** இதற்கு கொடுக்கிறார்கள். இதே போலத்தான் சகோ.ஸ்டான்லி அவர்களும் மேல்அறையில் **துதியோடும் விண்ணப்பத்தோடும்** காத்திருந்தார்கள் என்று குறிப்பிடுகிறார். இவர் இந்த இரண்டு வார்த்தைகளையும் இங்கு உபதேசிப்பதின் உள்நோக்கம் விளங்குகிறதல்லவா?

அடுத்தது சகோ.ஸ்டான்லி கூற நினைப்பது பெந்தேகோஸ்தே நாளில் மேல் வீட்டில் இரண்டு பெரிய அடையாளம் காணப்பட்டது. 1) **முழக்க சத்தம். 2) அக்கினிமய நாவுகள்** இவைகளை காட்டிலும் வெளியில் இருந்தவர்களை **பிரம்மிப்பில் ஆழ்த்தியது என்னவென்றால் சீஷர்கள் பேசின பற்பல பாஷை வரமே** (அப். 2:1-12) என்று எழுதியுள்ளார். இதன்மூலம் அன்னிய பாஷை உபதேசத்துக்கு முக்கியத்தவம் கொடுக்க முயலுகிறார்.

**ஒருவரோடு பழகுவதற்கு பேச்சு** முக்கியமானதுபோல **உறவாடலுக்கு - உரையாடல்** அதாவது பாஷை **உறுதுணை** என்று கூறி முடிக்கிறார். மேலும் **சகோதரர் கூறுவதாவது**

**ஆவிமண்டலத்தில் தேவனோடு** உரையாடுவதற்க்காய் அவர் தந்துள்ளதுதான் **பாஷை வரம்** அதற்காக தேவனை துதிப்போம் என்கிறார்.

## சகோ. R. ஸ்டான்லி அவர்கள் மேலே கூறிய அத்தனை விவரங்களும் தவறானவையாகும்

**சகோ. ஸ்டான்லி** அவர்கள் எழுதியதுபோல **பாஷை,வரம் ஆவிமண்டலத்தில்** தேவனோடு பேசுவதற்கு தரப்பட்டதல்ல. **பாஷை- வரம்** என்பது வேதபுத்தகம் எழுதப்படாத காலத்திற்குமுன் ஆரம்பிக்கப்பட்ட **ஆதி திருச்சபைக்காக** கொடுக்கப்பட்டதுதான் **பாஷை வரம் ஆகும்.** எல்லாரும் **அன்னிய பாஷையில்** பேசுவதற்கு கொடுக்கப்பட்டதல்ல. 1 கொரி 12ம் அதிகாரம் முழுவதும் **சபையைப்** பற்றியும் **சபைக்குள்ளே** உள்ள ஊழியங்களைக் (1 கொரி 12:28) பற்றியும் **சபைக்குள்** நிகழ்த்தப்படும் **வரங்களைப்பற்றியும்** (1 கொரி.12:4-13) பவுல் மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

**ஆவி உலகத்தில்** பிசாசின் **ஆவிகளோடு** பேசுகிறவர்கள் உண்டு. கோயமுத்தூர், ஈரோடு, சென்னை. திருச்சூர் (கேரளா) இங்கெல்லாம் ஆவிகளோடு பேசும் கிறிஸ்தவர்கள் உண்டு. அவர்கள் **பிசாசுடன்** பேசும்முன் **ஓம் ரீம் உம்** என்றெல்லாம் உளறிவிட்டு அதன் பிறகு ஆவி உலகத்துக்குள் பிரவேசித்து **பிசாசின் ஆவிகளுட**ன் பேசுகிறார்கள்.

நம் பெந்தேகோஸ்தே சபை நண்பர்களும், சகோ.R. ஸ்டான்லி கூறுவதுபோல் ஆவி உலகத்தோடு பேசுகிறவர்கள் போல்தான் இவர்களும் ஜெபத்தில் **அன்னிய பாஷை** பேசுவதும் காணப்படுகிறது. **ஷங்கரபலா-ஷக்கரபலா-க்கக்கா-த்தத்தா-த்தத்தத்** இப்படிப்பட்ட சத்தங்கள் **ஊ** என்ற **கூவல்கள்கூட** ஆராதனையில் கேட்கப்படுகிறது. இதுவா **தேவனிடம் ஆவி உலகத்தில்** பேசப்படுவது? அன்னிய பாஷையை நான் **நக்கல், கிண்டல்** செய்வதாக நீங்கள் நினைத்தால் அதில் எனக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லை. உலகமே சிரிக்கிற மாதிரிதான் இருக்கிறது. இச்சபையினரின் அன்னிய பாஷை. குறிப்பாக நீங்கள்பெற்ற **பிள்ளைகளே** நீங்கள் பேசும் **அன்னிய பாஷையை** குறித்தும் பாஸ்டர் பேசும் அன்னிய பாஷையைக் குறித்தும் **நையாண்டி** (மிமிக்கிரி) செய்து காட்டி சிரித்ததை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். நான் பல வீடுகளில் இதை கண்டிருக்கிறேன். பல பெந்தேகோஸ்தே சபைகளில் சிறு பிள்ளைகள் மட்டுமல்ல, சபை ஆராதனையில் அமர்ந்திருக்கும் **வாலிபர்கள்** அன்னிய பாஷையில் பாஸ்டர் பேசும்போது அதை நையாண்டி செய்ததை வீடியோவிலும் நான் கண்டிருக்கிறேன்.

ஆக **பாஷைவரம்** என்பது சகோ.ஸ்டான்லி கூறுவதைப்போல ஆவிமண்டலத்தில் **தேவனோடு பேச அல்ல என்பதை அறியவேண்டும்.** இதுவரை வேத புத்தகத்தில் **பாஷைவரம் மூலம் யாரும் தேவனோடு பேசியதில்லை.** ஆனால் வேதத்தில் எழுதப்பட்ட **பாஷைவரம்** அன்றைய சபைக்காக வரமாக கொடுக்கப்பட்டதாகும். 1 கொ. 14:1,2 என்ற இந்த வசனத்தை சுட்டிக்காட்டி பாஷைமூலம் தான் **தேவனோட பேசினார்கள்** என்பதற்கு ஆதாரமாக இந்த வசனத்தை காட்டுவார்கள். ஏற்கனவே நான் எழுதியபடி பெந்தேகோஸ்தே சபையினர் யாவரும் **இந்த ஒரு வசனத்தை** பிடித்துக்கொண்டு விளையாடுகிறார்கள். இதற்கான விளக்கத்தை என் கட்டுரையின் **முடிவுரையில்** கண்டிப்பாக விளக்குவேன்.

இப்போது சகோ. ஸ்டான்லி அவர்களுக்கும் வாசிக்கிற உங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால் கர்த்தர் **சபை மக்களோடு** பேசுவதற்கு. **பாஷை வரத்தைப்** பயன்படுத்தினார் அதுவும் வேத புத்தகம் எழுதபடாத காலத்தில் பாஷை வரத்தை கர்த்தர் பயன்படுத்தினார்.

▣ மேலறையில் சீஷர்கள் மூலமாக பேசப்பட்ட **பற்பல பாஷைகள் அர்த்தம் கொண்டதாக** இருந்தது என்றும் அந்தந்த பாஷைக்குறியவர்கள் **அங்கிருந்தார்கள்** என்பதையும் சகோ. **ஸ்டான்லி** சரியாக கூறியிருக்கிறார். அனால் அதற்கு அடுத்ததாக எழுதிய வார்த்தையிலே அவருக்கு தெளிவில்லை. மற்றவர்களையும் குழப்பிவிட்டார். அதாவது எல்லா பாஷைகளுக்கும் அர்த்தம் **விளங்கும்** என்று **எதிர்பார்க்கக்கூடாது** என்று எழுதியுள்ளார். அதாவது **அந்நிய பாஷைக்கு** அர்த்தம் வேண்டாம் என்பது சகோ. ஸ்டான்லியின் முடிவு. 1 கொரி. 14:8-10) இந்த வசனத்தை வாசித்து முடிவெடுங்கள்.

▣ சகோ. ஸ்டான்லி பெந்தேகோஸ்தே நாள் அன்று **பாஷைகள்தான்** மக்களை கவர்ந்தன அவ்வளவுதான் என்கிறார். இவர் கூறுவது மிகவும் தவறு, **பாஷைகள்** எதற்கு மக்களை **கவரவேண்டும்.** ஏற்கனவே நான் மே மாத ஜாமக்காரனில் எழுதியதை போல அவர் பேசிய பாஷைகள் மக்களை கவர அல்ல. **மக்களை உறுதிபடுத்தப்படுவதற்காக பேசப்பட்டது.** அதில் **தேவனின் மகத்துவங்களை** கூற கேட்கிறோமே ! என்றார்களே ! அதை ஸ்டான்லி அவர்கள் கவனிக்காமல் விட்டுவிட்டார். சரித்திரத்தை பின் நோக்கி பார்த்தால் அந்த **மகத்துவம்** என்ன என்பதை **பழைய ஏற்பாட்டு** சம்பவத்தையும் **சங்கீதத்தில்** கைதிகளை பாட சொன்னதையும் குறித்து ஏற்கனவே ஜாமக்காரனில் எழுதியிருந்தேன். அதை கேட்டு இந்த சீஷர்கள் யாவரும் நம் தேவனை ஆராதிப்பவர்கள் என்பதையும் இவர்கள் கூறுவது நாம் வழக்கமாக கூறும் தேவ மகத்துவம் ஆகும் என்று உணர்ந்தனர். நம்மூதாதையர் **தேவனின் மகத்துவத்தை** பாடலாய் பாடி, ஒவ்வொரு **தலைமுறை மக்களுக்கும்** சொல்லி கொடுத்து ஆகும். இப்போது இந்த சீஷர்கள் அதே **மகத்துவத்தை** கூற கேட்கிறோமே ! என்று அந்த சம்பவங்களை ஞாபகப்படுத்தி, இவர்களும் நம் இனத்தை சேர்ந்தவர்கள்தான் என்றும் இவர்களும் நாம் ஆராதிக்கும் **யாவேயைத்தான்** ஆராதிக்கிறார்கள் என்பதையும் அந்த மக்கள் உருதிப்படுத்திக்கொள்ள தேவன் செய்த மகத்தான ஏற்பாடு ஆகும்.

அதன்பிறகுதான் பேதுரு செய்த பிரசங்கத்தை அந்த மக்கள் கவனித்து **இயேசுதான்-மேசியா** என்று அவரை கர்த்தராக என்று ஏற்றுக்கொண்டார்கள்.

▣ அடுத்து சகோ.ஸ்டான்லி ஆரம்பத்தில் வேத வசனத்தை **திரித்து மாற்றி** கூறியதைபோல **பவுல்** கூறி **பாஷை விஷயத்துக்கும்** வேறு விளக்கம் கூறுகிறார். பவுல் கொரிந்தியருக்கு நிரூபம் எழுதும்போது தான் **பாஷை பேசும் வரத்தைப்**பெற்றுக்கொண்டதாக வசனத்தை மாற்றி தவறாக குறிப்பிடுகிறார் 1கொரி 14:18. **பாஷை பேசும் வரத்தை** பெற்றுக்கொண்டதாக வேதத்தில் நிருபங்களில் எங்கும் பவுல் கூறியதில்லை. வசனத்தை வாசகர்களாகிய நீங்களே எடுத்து வாசியுங்கள். உங்கள் எல்லாரிலும் நான் அதிகமாய் **பாஷைகளை பேசுகிறேன்** என்றுதான் எழுதியிருக்கிறார். **பாஷை வரத்தை** பெற்றிருக்கிறேன் என்றா அங்கு எழுதியிருக்கிறது? இல்லையே?. பாஸ்டர் **ராஜாமணி** தன் வாதத்துக்கு தன் கருத்தை திணிக்க வசனத்தை அப்படியே மாற்றி எழுதிய மாதிரி, **ஸ்டான்லியும்** எழுதுகிறார்.

நான் மே மாத ஜாமக்காரனில் எழுதியபடி பவுல் மட்டுமே புற ஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க பல நாடுகளுக்கு சென்று **பல பாஷைகாரர்களிடம் பேசி சுவிசேஷம்** அறிவித்திருக்கிறார். ஆகவே பவுல் மட்டுமே பேதுருவைவிட, யோவானை விட கொரிந்து சபையில் உள்ள **14 பாஷைகார்களை** விட **மிக அதிகமான பாஷைகளை** கற்றவர் ஆகிறார். ஆகவேதான் தான் கொரிந்துசபை மக்களைவிட **அதிக பாஷைகளை** நான் பேசுகிறேன் என்று தைரியமாக கூறுகிறார்.

ஸ்டான்லி அவர்கள் தன்உபதேசத்துக்கு வசதியாக பவுல் கூறி வார்த்தையை திரித்து உங்களைவிட நான் **அதிக பாஷைகளை** என்ற வார்த்தையுடன், **வரங்கள்** என்ற வார்த்தையை இவராக சேர்த்து சபையில் பேசும் **அன்னிய பாஷை** சரிதான் என்பதை உருதிபடுத்த முயலுகிறார்.

▣ சகோ. ஸ்டான்லியின் அடுத்த தவறான கருத்து என்னவென்றால் சகோ. ஸ்டான்லி எழுதும்போது பரிசுத்தாவியின் அருள் வரத்தை நீங்கள் எல்லாரும் **கர்த்தரிடம் கேட்கும்படி** ஊக்குவிக்கிறேன் என்கிறார். அதாவது **வரத்தை** கர்த்தரிடம் **கேட்க** சொல்லுகிறார்.

நான் முன்பே சொன்னபடி **வரம்** கொடுக்கப்படவேண்டியது ! **அது கேட்கப்பட வேண்டியதல்ல.**

▣ அடுத்து 9 வரங்களில் **பாஷை வரம்** மட்டுமே **தேவனை நோக்கி** செயல்படுவதாகும் என்கிறார். இது நூற்றுக்கு நூறு **தவறு. அன்னிய பாஷை வரம்** சபை மக்களோடு **கர்த்தர் பேச** பயன்படுவதாகும். மனுஷன் தேவனோடு **அன்னிய பாஷையில்** பேச வேண்டிய அவசியம் இல்லை. தேவனுக்கு நம் **எல்லாருடைய பாஷையும்** தெரியும் பின் எதற்கு நம்மை வேற்று மொழியில் அவர் பேச வைக்கவேண்டும். நம் தெய்வம் அத்தனை முட்டாள் அல்லவே.

**பவுல் கூறுவது** ஸ்டான்லி கூறுவதற்கு **எதிர்மாறாக** இருப்பதை கவனியுங்கள் 9 வரங்களில் **தீர்க்கதரிசன** வரத்தை நாடுங்கள் என்றுதான் பவுல் கூறினார். **அன்னிய பாஷையை** நாடுங்கள் என்று கூறவில்லை. வசனத்தை மறுபடியும் வாசித்து பாருங்கள். அதுவும் **தீர்க்கதரிசன வரத்தை கேளுங்கள்** என்று கூறவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியது. **நாடுங்கள், வாஞ்ஜியுங்கள் என்கிறார். கேளுங்கள் என்பதற்கும் நாடுங்கள் அல்லது வாஞ்ஜியுங்கள் என்பதற்கும் உள்ள வித்தியாசம் விளங்குகிறதா !**

**தீர்க்கதரிசனம்** என்றால் கர்த்தருடைய வார்த்தை என்று அர்த்தம். **தீர்க்கதரிசி** என்றால் கர்தருடைய வார்தையை **உறைப்பவன்** என்று அர்த்தம்.

**திருசபைக்கு** மற்ற எல்லா வரங்களைவிட **கர்த்தருடைய வார்த்தையில்** சபையை நடத்தப்பட வேண்டியது மிக முக்கியம். அவசியமுமாகும். அதனால்தான் மற்ற எல்லா வரங்களையும் விட **தீர்க்கதரிசன** வரத்தை நாடுங்கள் (விரும்புங்கள்) என்று பவுல் கூறுகிறார். ஆனால் சகோ.ஸ்டான்லியும், பாஸ்டர்.ராஜாமணியும் **அன்னிய பாஷை** வரம்தான் மிக முக்கியம் என்று எழுதியுள்ளார்கள். இது முற்றிலும் **தவறு.**

▣ இதற்கு பிறகுகூட சகோ. ஸ்டான்லி அவர்கள் தன் கட்டுரையில் எழுதுவது எல்லாம் வசனத்தைவிட்டு விலகி, **சொந்த அனுபவங்களையே** உபதேசமாக்க முயலுகிறார். **அன்னிய**

**பாஷை** துதிப்பதற்காக அருளப்பட்டது என்கிறார். இப்படி தான்சார்ந்த சபையின் அனுபவத்தை தன் கட்டுரையில் எழுதி முடிக்கிறார்.

▣ மேலும் அவர் எழுதும்போது **அன்னிய பாஷையில்** எல்லாரும் ஒட்டுமொத்தமாக **சப்தம் உயர்த்தி துதிப்பதை** நம் வேதம் **தடுக்கவில்லை** என்கிறார் **அன்னிய பாஷையில்** பாடலாம், **சப்தம் போடலாம்** என்று எங்காவது வேதத்தில் எழுதியுள்ளதா? அப்படி வேத்தில் எங்காவது **குறிப்பாக புதிய ஏற்பாட்டில்** எழுதப்பட்டுள்ளதா? யாராவது சொல்ல முடியுமா?

**தமிழ்நாட்டில் ஆராதனையில் நடனம் அறிமுகப்படுத்தியவர் சகோ ஸ்டான்லி ஆகும்.**

**அன்னியபாஷை** பேசி,**பாடி,**ஆராதனையில் **நடனமாட** தமிழ் நாட்டிலேயே முதல் முதல் கற்றுக்கொடுத்தது சகோ.R.ஸ்டான்லி ஆகும். Fபாதர்.**பெர்க்மான்ஸ்** அல்ல. Fபாதர் **பெர்க்மென்ஸ்** எல்லாம் **நடன ஊழியத்தில்** ஸ்டான்லிக்கு பின் வந்தவர்களே.

▣ சகோ. **D.G.S. தினகரன்** ஒருநாள் என்னிடம் கூறினார். சகோ. R. **ஸ்டான்லி** என்னிடம் வந்து தான் வாலிபர்களுக்காக விசேஷ ஊழியம் ஆரம்பித்திருக்கிறேன். உங்கள் கூட்டத்தில் இரட்சிக்கப்பட்ட **வாலிபர்களை** எங்களிடத்தில் அனுப்பினால் அவர்களை வாலிப வயதில் சரியாக வழிநடத்த உதவியாக இருக்கும் என்றார். நானும் சரி யோசிக்கிறேன் என்று கூறி ஸ்டான்லியை அனுப்பிவிட்டேன் என்றார். மேலும் அவர் கூறும்போது சகோ.ஸ்டான்லி **வாலிபர்களை** தன் கூட்டத்தில் நடத்தும் விதம் குறித்து பலர் பலவிதமாக கூறுகிறார்கள் ஆகவே என் சார்பில் நீங்கள் அவர்கள் கூட்டத்தில் நேரில் சென்று பங்குகொண்டு உண்மை விவரம் என்னிடம் அறிவியுங்கள். அதன் பிறகு அவர் கூட்டங்களுக்கு வாலிபர்களை அனுப்பலாமா, வேண்டாமா என்று நாம் தீர்மானிக்கலாம் என்றார்.

அப்படி D.G.S. அவர்கள் என்னிடம் கூறியதற்கு அடுத்த மாதமே **தஞ்சாவூரில்** Blessing வாலிப கூட்டம் நடந்தது. அன்றைய ஆரம்ப நாட்களில் Blessing கூட்டங்களில் வாலிப பெண்களும், வாலிப பையன்களும் இணைந்தே Blessing கூட்டங்களில் கலந்துகொள்வார்கள். இரண்டாம் நாளோ, மூன்றாம் நாளோ எனக்கு ஞாபகம் இல்லை நான் தஞ்சாவூர் சென்று அவர்கள் கூட்டம் நடக்கும் இடத்தில் நான் உள்ளே நுழைந்து கடைசி நாற்காலியில் அமர்ந்தேன். **நான்** வந்ததை **ஸ்டான்லி** அவர்கள் கண்டுகொண்டார். உடனே என்னை மேடைக்கு அழைத்துவர ஆட்களை அனுப்பினார். உடனே நான் அவர்களிடம் கூட்டத்தில் கலந்துகொள்ள மட்டும் வந்தேன். தயவுசெய்து என்னை மேடைக்கு அழைக்க வேண்டாம் என்று சொல்லி அனுப்பினேன். சற்று நேரத்தில் சகோ.ஸ்டான்லியின் செய்தி முடிந்தது. உடனே பாடல் வேளை தொடங்கியது. அப்போது Great is the Lord என்ற ஆங்கில பாடலை பாடினார்கள். இருக்க இருக்க பாடலின் வேகம் கூடியது. உடனே சகோ ஸ்டான்லி Every body should come out from the chair என்றார். உடனே வாலிபர்கள் நாற்காலிகளை நகர்த்தி அவரவர்கள் மிகவும் சத்தமாக **கைதட்டி** பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில் ஆவியானவர் இறங்குகிறார் எல்லாரும் **நடனமாடி** தேவனை துதிப்போம் என்று சகோ.ஸ்டான்லி கூறினார். அவ்வளவுதான் வாலிபர்கள் எல்லாம் மிகவும் **உணர்ச்சிவசப்பட்டு** அசுத்த ஆவியால் ஆட்கொண்டவர்கள் போல **கைகளை தட்டியும்,தலையை ஆட்டியும்** பேய் பிடித்தவர்களைப்போல **துள்ள ஆரம்பித்தார்கள்.**

ஒரு வாலிபன் தன் முன்னே இருக்கும் **பைபிளை** எட்டி உதைக்க அது எங்கோ போய் விழுந்தது ! என்ன அலங்கோலமான காட்சியாக அது இருந்தது தெரியுமா?

அந்த சூழ்நிலையில் நான் வெளியே போகலாமா, சேரில் அமர்ந்து கொள்ளலாமா என்று தயங்கி கொண்டிருந்த வேளையில் திடீர் என்று ஒரு நிகழ்ச்சி நடந்தது. சில **வாலிபர்கள்** மேடையில் நின்று பாடிக்கொண்டிருந்த **ஸ்டான்லியை நோக்கி** ஓடினர். அவரை தொட ஆசைப்பட்டனர். ஒருவன் ஸ்டான்லியின் தோளைபிடிக்க முயன்றபோது அவன் **கை சகோ. ஸ்டான்லியின் பாக்கொட்டை கிழித்தது** ஒரு **துண்டு துணி** அவன்கையோடு வந்துவிட்டது. ஸ்டான்லி கிழிந்த சட்டையுடன் கந்தசாமி கோலத்தில் நிற்கிறார். அந்த **துண்டு துணியை** எடுத்தவன் அந்த கூட்டத்தில் **துள்ளாமல் நிற்கும்** வாலிபர்கள் மேல் அந்த துண்டு துணியை வைத்தான் அவ்வளவுதான் அந்த பையன் உடனே துள்ள தொடங்கிவிட்டான். பல வாலிபர்கள்மேல் அந்த **துண்டு துணி** வைக்க எல்லாரும் துள்ளி குதித்தார்கள். இது திட்டமிட்ட ஏற்பாடா? எனக்கு யூகிக்கமுடியவில்லை, கூட்டம் முடியுமுன்னே நான் பாதியிலேயே எழுந்து வெளியேறி வாகனத்தில் ஏறி, சேலம் வந்து சேர்ந்துவிட்டேன். மறுநாள் மேட்டூர் டேமில் S.B.I பேங்க் மேனேஜராக இருந்த சகோ. D.G.S. தினகரிடம் நடந்தவற்றை அப்படியே கூறினேன். அப்போது D.G.S. சொன்னதாவது நல்ல வேளை 15 வாலிபர்களை அங்கு அனுப்ப ஏற்பாடு செய்திருந்தேன். இனி யாரையும் Blessing கூடடத்துக்கு போக நான் உற்சாகபடுத்தமாட்டேன் என்றார். ஸ்டான்லியின் **இந்த உபதேசம் தவறானது** என்றும் கூறிவிட்டார்.

சகோ. D.G.S. தினகரன் அவர்கள் **காருண்யா கல்லூரி** கட்டுவதற்கு சில காலத்திற்கு முன் **உண்மையான ஊழியத்தை** சகோ.D.G.S.அவர்கள் செய்த காலத்தில் இந்த சம்பவம் நடந்தது. அதன்பின் சகோ.தினகரன் அவர்களும் வசனத்தைவிட்டு விலகி பிழையான உபதேசத்துக்குள் நுழைந்தார். ஆவியானவரும் அவரை விட்டு விலகிவிட்டார் என்பது துக்கமான விஷயமாகும்.

▣ சகோ. ஸ்டான்லி அவர்கள் **BYM மிஷனரி** ஊழியத்தில் ஆழமாக ஈடுபட ஆரம்பித்தபின் **ஆவியில் நடனமாடுவது** இவர்கள் கூட்டங்களில் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்கப்பட்டதாக அறிந்தேன். இப்போது எப்படியோ? தெரியவில்லை. இதற்கெல்லாம் மூல காரணம் **அன்னிய பாஷை** என்ற பெயரில் ஏற்படும் **உளரல்** சபைகளுக்கு மிக அவசியம் என்ற இவரின் தவறான உபதேசமும் அபிப்பிராயமுமாகும். ஊழியத்தில் ஸ்டான்லி அவர்கள் ஓரளவு முதிர்ச்சி அடைந்த பிறகு சில ஆண்டுகள் கழித்துதான் அன்னிய பாஷைப்பற்றிய இந்த **விளக்க கட்டுரை** எழுதிய சூழ்நிலை உண்டானது.

▣ இதில் மிக முக்கியமான ஒரு சம்பவம் என்னவென்றால் **என் மகன் Dr. Sam** சகோ.ஸ்டான்லி அவர்கள் திருச்சியில் (Blessing) நடத்தின கூட்டத்தில்தான் **மனம் திரும்புதலின்** (இரட்சிப்பின்) அனுபவத்தை பெற்றார் என்பதை கர்த்தருக்கு மகிமையாக இதை அறிவிக்கிறேன். இந்த மிக முக்கிய சம்பவத்துக்காக சகோ. ஸ்டான்லிக்கு நன்றியையும் கூறிக்கொள்கிறேன்.

சகோ.ஸ்டேன்லி அவர்கள் தொடர்ந்து தான் பெற்ற **அன்னிய பாஷை** அனுபவத்தைப்பற்றி கூறும்போது 1963ம் வருடம் CSI ஆங்கிலிக்கன் சபையில் பிறந்து வளர்ந்தவன் நான் என்றும் ஆனால் **கல்லூரி மாணவனாக** இருந்த காலத்தில் **பெந்தேகோஸ்தே அல்லாத** மாணவர்

கூடுகை ஒன்றில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்று அன்றிலிருந்து நான் அன்னிய பாஷையில் பேசி வருகிறேன் என்று எழுதியுள்ளார். ஆனால் இவர் இந்த அனுபவத்தை குறிப்பிடும்போது, இவரின் ஆரம்ப கால மாணவர் கூடுகையில் கலந்துகொண்டதை **பெந்தேகோஸ்தே அல்லாத மாணவர் கூடுகை** என்று குறிப்பிடுகிறார். அந்த சம்பவத்தை பற்றி அன்றைய அவர் நண்பர்களில் ஒருவர் என்னிடம் கூறும்போது அந்த மாணவர் கூடுகையில் பெந்தேகோஸ்தே சபை மாணவர்களும் இருந்தார்கள் என்று கூறியிருக்கிறார்.

ஜெபகூடுகையில் சிலர் அன்னிய பாஷையில் பேசி துதித்தால், அதை அருகிலிருந்து கேட்பவர்களுக்கு இதுதான் **வல்லமையோ** என தானும் அவர்களைபோல் அன்னிய பாஷையில் துதிக்க தானாகவே அந்த எண்ணம் வரும். எப்படியோ சகோ.ஸ்டான்லி அவர்கள் CSI சபையில் இருந்து வந்தவரானாலும், **பெந்தேகோஸ்தே** சபை விசுவாசிகளான மாணவர்களாலும் **பெந்தேகோஸ்தே** சபையை சார்ந்த அண்ணன்மார்களாலும் **சகோ ஸ்டான்லி அவர்கள் வழிநடத்தப்பட்டார்** என்பதை அவரிடமே கேட்டு அறிந்துகொள்ளலாம்.

அவர் எனக்கு எழுதிய கடித கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில் ஆவியினால் நிறைந்து நமது இருதயத்தில் கர்த்தரை பாடி கீர்த்தனம் பண்ணுவது, **மது போதையின் சிற்றின்பத்தையும் அன்னிய பாஷை அனுபவம் தோற்கடிக்கும்** என்று எழுதியுள்ளார். அது முற்றிலும் உண்மை. **அன்னிய பாஷை** பேசியே பழக்கம் உள்ளவர்களை Extremist Spiritual Addict ஆனார்கள் என்பார்கள். இவர்கள் **CSI, லூத்தரன், பிரதரன்** சபைகளுக்குபோனால் அவர்களால் கொஞ்ச நேரம்கூட அந்த ஆராதனையில் பங்கெடுக்க முடியாது. அதற்குதான் மற்ற எல்லா சபைகளையும் **செத்துபோன** சபைகள் என்று இவர்கள் பெயர் வைத்துள்ளார்கள். **மதுபானத்துக்கு** (Addict) அடிமையானவர்களை அதிலிருந்து விடுவிக்க நரம்பு வழியாக கொடுக்கும் மருந்து உண்டு. ஆனால் **அன்னிய பாஷை** என்று இவர்கள் கூறி ஆடி **அமர்களப்படுத்தும்** பிழையான ஆராதனை பழக்கத்திலிருந்து இவர்களை விடுவிக்க மருந்தே இல்லை. நாம் இவர்களுக்கு **வசனத்தை காட்டி** தெளிவாக விளங்க வைக்க முயன்றாலும் இவர்களுக்கு தாங்கள் பயின்ற தவறான அனுபவத்திலிருந்து இவர்கள் வெளியே வர கஷ்டப்படுகிறார்கள். **ஆவியானவராக** பார்த்து இவர்களை தான் எழுதிய வசனம் மூலம் தொட்டால்தான் சரியான உபதேசத்துக்கு திரும்பி வருவார்கள்.

## சத்தம்போட்டு துதிப்பது

மேலும் சகோ.R. ஸ்டான்லி கூறுகிறார். சபையில் விசுவாசிகள் அனைவரும் **ஒரு மனமாய் விரும்பி அன்னிய பாஷையில் தங்கள் சப்தங்களை உயர்த்தி தேவனை துதிக்க வாஞ்சித்தால்?** அதை வேதம் கண்டிக்கவில்லை என்று மறைமுகமாக அந்நியபாஷை பேச துண்டுகிறார். சகோ.ஸ்டான்லி அவர்கள் **சத்தம்போட்டு துதிக்க** சொல்லுகிறார், அதனால் தான் இவர் ஆராதித்து வந்த சபையின் தாக்கம், இவர் **ஊழியத்திலும்**, இவர் **உபதேசத்திலும்** காணப்படுகிறது. அதனால்தான் பெந்தேகோஸ்தே சபை ஆராதனை என்றாலே **சத்தம்**, அதுவும் **பெருத்த சத்தம்** கேட்கவேண்டும். நம் தேவன் செவிட்டு தெய்வம் என்பது இவர்களின் தவறான எண்ணம் ஆகும். புறமதத்தினரும் சத்தம்போட்டு **விக்கிரகத்துக்கு** முன் **கத்துவதை, அலறுவதை** காண்கிறோம். சில இடங்களில் வெடிவைத்து சப்தம் உண்டாக்கி வேண்டுதலை அறிவிக்கிறதையும் பார்க்கிறோம்.

**இந்துமத** பின்னணியிலிருந்து வந்தவர்கள் கிறிஸ்தவர்களாக மாறியபின் இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொண்டார்களே தவிர, தாங்கள் வளர்ந்த இந்து மதத்தின் பின்னணியின் சடங்குகளை இவர்கள் மறக்கவில்லை. அதே **சத்தம்,** அதே **கைதட்டல்**, அதே **அலறல்,** அதே **நடுக்கம்** ஆவியாய் இருக்கிற நம் தேவனை இப்படியா ஆராதிப்பது ? இதை சமாளிக்க சகோ. ஸ்டான்லி அவர்கள் மிகுந்த சத்தமிட்டு ஆராதிப்பதை வேதம் கண்டிக்கவில்லை என்கிறார்.

சில வாலிபர்கள் குதற்கமாக கேள்வி கேட்பார்கள். **சிகரட்,பீடி,சுருட்டு** குடிக்காதோ என்று நம் **வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறதா?** கூறுங்கள் என்பார்கள். **சினிமா பார்க்காதே** என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? என்பார்கள். சில வாலிபப்பெண்கள் ஆபாசமான முறையில் **லெக்கின்ஸ்,** இருக்கமான ஜீன்ஸ் **பேன்ட்** அணியக்கூடாது என்று வேதத்தில் எழுதியிருக்கிறதா ?என்று கேட்பார்கள். சகோ ஸ்டான்லி இதற்கு என்ன பதில் கொடுப்பார்? இந்த வாலிப பிள்ளைகள் கேட்பதுபோல் மேலே சகோ ஸ்டான்லி **சப்தங்களை உயர்த்தி** தேவனை துதிப்பதை கண்டித்தோ அல்லது அது தவறு என்று குறிப்பிட்டோ வேதத்தில் எதுவும் எழுதப்படவில்லை என்றுதானே பதில் கூறுவார். வேதத்தில் எழுதப்படாததால் **புகை பிடிக்கலாமா?** இதற்கு ஸ்டான்லி பதில் கூறுவாரா? ஆனால் நான் பதில் கூறுவேன்.

வேதம் கூறுகிறது, **தீமையாய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகு** என்று வேதத்தில் எழுதியிருக்கிறது. நவீன காலத்தில் காணப்படும் **புதிய புதிய பாவங்கள்** நிறைய உண்டு. **மொபைல் டேபிலட், வாட்ஸ்ஆப்,பேஸ்புக்** இவைகள் மூலம் நிறைய பாவங்கள் உண்டே! இவை எதுவும் வேத புஸ்தகத்தில் எழுதப்படவில்லை. கிறிஸ்தவர்கள் இதை அனுமதிக்கலாமா? வேதம் இதை அனுமதிக்கிறதா? என்று கேட்பது நியாயமாக இருக்குமா ?

மிகுந்த சத்தமிட்டு துதிக்க கைகளை தட்டி ஆராதனையில் பாட இவர்கள் ஆதாரத்துக்கு பழைய ஏற்பாட்டை காண்பிப்பார்கள். இவர்கள் இன்னும் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளாகத்தான் இருக்கிறார்கள் என்று உறுதியாகிறது.

▣ ஆராதனையில் **சத்தம்** அதுவும் **மிகுந்த சத்தம்**போட்டு **துதிக்கவேண்டாம்.** செவிட்டு தெய்வத்தை ஆராதிக்கும் கூட்டமா கிறிஸ்தவ கூட்டம். இன்று **அல்லேலூயா சத்தம், ஆமென் சத்தம், பிரைஸ் த லார்டு** போன்ற **போலி சத்தங்கள்** CSI சபைகளிலும் பெருக ஆரம்பத்துவிட்டன. பெந்தேகோஸ்தே சபையினர் **வல்லமை** என்ற மாயத்தை காண்பிக்க ஆராதனையில் போடும் இவர்களின் இப்படிப்பட்ட **சத்தத்தை** பரிசுத்த ஆவியானவரின் நிறைவுக்கு இதுதான் **அடையாளம்** என்று அவர்கள்தான் சபை மக்களை ஏமாற்றுகிறார்கள்.! அதை ஏன் இவர்களும் காப்பியடித்து மக்களை ஏமாற்றுகிறார்கள்? என்று தெரியவில்லை. வான்கோழி தோகையை விரித்து ஆடிய கதைதான் ஞாபகத்தில் வருகிறது.

▣ அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறியுங்கள் என்று வேதம் கூறுகிறது. சகோ. ஸ்டான்லி ஆராதனையில் சத்தமாக துதித்து ஆராதிக்ககூடாது என்று பைபிள் கூறுகிறதா என்று கேட்பதுபோல **அன்னிய பாஷையில் தேவனை துதிப்பதை வேதம் கண்டனம் செய்கிறதா?** என்றும் கேட்கிறார்.

இப்படிப்பட்ட தவறான உபதேசங்கள் இவர்களுக்குள் இருப்பதால்தான் BYM வாலிபர்களின் கூடுகையில் **வாலிபப் பிள்ளைகள், பிசாசு பிடித்தவர்கள் துள்ளுவது போல**

துள்ளி ஒருவர்மேல் ஒருவர் விழுவதும், ஆவியில் நிறைந்த வாலிபர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் எட்டி உதைப்பது **பைபிளா?,** விளையாட்டில் உபயோகிக்கும் **பந்தா** என்று கூட இவர்கள் அறிய முடியாமல் நிதானம் இழந்து எல்லாவற்றையும் காலில் எட்டி உதைத்து பந்தாடுகிறார்கள். என்ன அலங்கோலம் இது? எத்தனை ஒழுங்கின்மை இது? இத்தனை ஆழமாக பிரசங்கிக்கிற இந்த அருமையான சகோரனுக்கும், இவர் ஸ்தாபனத்தை சேர்ந்த **சகோ.லைனல்** அவர்களுக்கும் இவைகள் **யாவும் தவறான வழிநடத்தல்** என்று தெரியாதோ! என்று சில வாசகர்கள் எனக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். அதையும் வாசித்து பாருங்கள்.

## கடிதம். 1:

▣ சகோ. ஏசுரத்தினம் (கோயமுத்தூர்) என்பவர் எழுதிகிறார். அந்த காலத்தில் Blessing வாலிபர் கூட்டத்துக்கு நானும் சிலரும் **தஞ்சாவூர்க்கு** வழக்கமாக போவோம், கூட்டத்தில் கலந்துகொள்வோம். அப்போது ஜெப நேரத்தில் எல்லா வாலிபர்களும் பரிசுத்தாவி **கிடைக்க ஜெபத்தில் கதறுவார்கள்.** ஆனால் அவர்களுக்கு **அன்னிய பாஷை** வராது. அப்படிப்பட்ட வாலிபர்களிடம் **சகோ. லைனல்** அவர்கள் ஒவ்வொருவர் பக்கத்திலும் வந்து ஒவ்வொருவர் **காதிலும்** இயேசுபலபலவா, **சுதபலபலவா ஷராபலா** இப்படி ஏதோ உளரியபடி சொல்லிக்கொடுப்பார். அதை கேட்டு நானும் அப்படி முயற்சி செய்து பேச முயன்றேன். உடனே ஒரு நாள் நானும் **அன்னிய பாஷை** என்று அவர்கள் உளறுவதை பேசிவிட்டேன். ஆனால் உங்கள் பத்திரிக்கை ஜாமக்காரன் எனக்கு மிகப் பெரிய தெளிவை உண்டாக்கியது. அந்த காலத்தில் நான் **அன்னிய பாஷை** என்று உளறியதை நினைத்து **வெட்கப்படுகிறேன்.** நான் எவ்வளவு பெரிய **ஏமாளியாக** அன்று மாற்றப்பட்டேன் என்று வெட்கப்படுப்படுகிறேன் என்றாலும் அதன் பின்னும் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் நான் Blessing கூட்டத்துக்கு போனேன். அதன் ஒரே காரணம் **சகோ. ஸ்டான்லியின்** ஆழமான நல்ல **பிரசங்கம்** என்னை கவர்ந்தது. அவரின் **வேத அறிவு** மிக அற்புதம். அப்படிப்பட்டவர் இந்த **அன்னிய பாஷை** வசன அடிப்படை இல்லை என்று அறிந்தும் அந்த உபதேசத்தில் இப்படி வெறித்தனமாக எப்படி மாறினார் ?

## கடிதம். 2

இன்னொரு வாசகர் **வால்பாறையிலிருந்து** எழுதுகிறார். **சகோ. லைனல்** அவர்கள் **அன்னிய பாஷையை** காதில் சொல்லிக்கொடுக்கும் முறை தவறானது என்பதை சகோ. ஸ்டான்லி அறியாமலா இருப்பார். திரு. லைனல் அவர்கள் அன்னிய பாஷையை சொல்லிக் கொடுக்கும் முறை **தவறானது** என்று தெரிந்தும் சகோ. ஸ்டான்லி அன்று சகோ. லைனலை எப்படி அனுமதித்தார். அப்படியானால் சகோ. ஸ்டான்லியின் **அன்னிய பாஷையும் செயற்யைாகத்தானே** இருக்கும்?

**இப்படி பல விமர்சன கடிதங்கள் வந்துக்கொண்டிருந்தது.**

சகோ. ஸ்டான்லி அவர்கள் எழுதிய கடிதத்தில் மற்றுமொரு உண்மை செய்தியை அவர் அறியாமலே எழுதியிருக்கிறார். **காலகாலமாய் நாம் பழகிவிட்ட பாரம்பரியத்தை திடீரென விட்டுடொழிப்பது அவ்வளவு சுலபமல்ல** என்று எழுதியிருக்கிறார். இது உண்மைதான். ஜாமக்காரனை வாசித்து தெளிவுபெற்றபெந்தேகோஸ்தே சபை பாஸ்டர் ஒருவர் எழுதுகிறார்.

டாக்டர் நான் அன்னிய பாஷை விஷயத்தில் தெளிவுபெற்றுவிட்டேன். ஆனால் ஜெபிக்கும்போது அன்னிய பாஷை உளறல் என்னை அறியாமல் தானாக வந்துவிடுகிறது. அன்னிய பாஷையை பேசுவதை நிறுத்தவேண்டும் என்று நானும் என் மனைவியும் ஒன்றாகத்தான் தீர்மானம் எடுத்தோம். அதில் மனைவிக்கு வெற்றி கிடைத்துவிட்டது. அனால் எனக்கு முடியவில்லை. பல வருடங்கள் நாங்கள் பாஷையில் பேசி ஜெபிக்கும் முறை ஊறிப்போன பழக்கம் நிறுத்தமுடியவில்லை. இரண்டு நாள் உளறாமல் தெளிவான தமிழில் ஜெபித்தேன். நன்றாகத்தான் இருந்தது. ஆனால் அன்னிய பாஷையில் கொஞ்ச நேரம் உளறினாலும் அதில் ஒரு **சுகம்** இருக்கிறது என்று எழுதியுள்ளார்.

இந்த கடிதம் எழுதிய பாஸ்டர் அன்னிய பாஷையில் ஒரு **சுகம்** இருக்கிறது என்று குறிப்பிட்டதைத்தான் சகோ. ஸ்டான்லி **அன்னிய பாஷை மது போதையின் சிற்றின்பத்தை தோற்கடிக்கும்** என்று எழுதியுள்ளார். நான் முன்பு குறிப்பிட்டதுபோல் **மது பானபழக்கத்தை** நிறுத்த வைத்தியம் உண்டு. ஆனால் **அன்னிய பாஷை** பேசி பழகிவிட்டால் அதிலிருந்து விடுதலை பெறுவது கடினம்.

▣ மற்றொரு வித்தியாசமான அனுபவத்தை சகோ. ஸ்டான்லி எழுதுகிறார். என் மாணவ பருவத்திலே சில பரிட்சைகளில் ஒரு சில கேள்விகளுக்கு பதில் எழுதும்போது விடை அறியாமல் ஒரே குழப்பமாய் இருந்தால் கொஞ்ச நேரம் அமைதியாக **அன்னிய பாஷையில் பேசிவிட்டு** பின்னர் எழுத தொடங்குவேன். அதன்பின் நல்ல தெளிவுடன் **பதில்** எழுத முடியும் என்கிறார். இது தமாஷாக இல்லை ! **வயிற்றுவலி** என்றால் **வயிறு வலிக்கிறது என்று கூறினால்தான்** அதற்கு பரிகாரம் செய்ய முடியும். அதை விட்டுவிட்டு **அன்னிய பாஷையில்** பேசினால் கர்த்தர் அதை கேட்டு **வயிற்றுவலியை** சுகமாக்கிவிடுவாரா? என்ன பிதற்றல் இது? இந்த ஜெபத்துக்கு கர்த்தர் என்ன பதில் சொல்லுவார் தெரியுமா?

முதலில் அன்னிய பாஷையில் உளறுவதை நிறுத்தி உன் பிரச்சனை என்ன ? அதை தெளிவாக சொல் என்று தானே கேட்பார். அதுபோல பரிட்சையில் எந்த கேள்விக்கு பதில் தெரியவில்லையோ, அதைஞாபகத்தில் கொண்டுவர கர்த்தரின் உதவியை கேட்பதில் தவறில்லை, கர்த்தாவே எனக்கு **ஞாபக சக்தியை** தாரும் என்றால் ஞாபக சக்தியை கொடுத்து, அந்த கேள்விக்கு பதில்எழுத உதவி செய்வாரே! யாக். 1:5 **ஞானத்தை** (Wisdom) கேட்டால் ஞானத்தை தருவேன் என்று வசனத்தில் உறுதியளித்திருக்கும்போது பரிட்சை எழுதும் இடத்தில் **அன்னிய பாஷை** பேசினால் ஞாபக சக்தியை எப்படி கொடுப்பார்?

இப்படி **பாஸ்டர் ராஜாமணி. ஆர். ஸ்டான்லி** ஆகிய இவர்களெல்லாம் தங்கள் சொந்த **அனுபவங்களைத்தான்** உபதேசங்களாக்க முயல்கிறார்கள் என்பது மிக நன்றாக தெரிகிறதல்லவா?

## வரங்கள்

▣ **9 வரங்களை** பற்றி கூறும்போது **இவர்கள் இரண்டு பேரும்** ஒன்றுபோல் கணக்கை தலைகீழாக திருப்புகிறார்கள். **ஒன்பது** வரங்களில் ஒன்று, இரண்டு, மூன்று.... இப்படிதானே பொதுவாக நாம் வரிசைபடுத்துவோம். **முதல்** வரம் எது? **கடைசி** வரம் எது? என்று

வரிசைப்படுத்துவதுதான் ஒழுங்கு. ஆனால் இவர்கள் இரண்டு பேரும் எங்கிருந்தோ ஒரு **ஏணியை** வாங்கிவந்து **முதல் வரிசையை** மாற்றி கூற **ஏணியை தலைகீழாக** பிடித்து **ஒன்பதாவது** வரத்தை முதல் படி என்று மாற்றி, **முதல்படியில்** கால்வைத்தால்தான் நாம் **மேல்படிக்கு** போக முடியும் என்று கூறி **கடைசி வரமாகிய** அன்னிய பாஷையை முதல் ஏணி படி என்று இவர்கள் வர்ணித்து எத்தனை ஞானமாய் ஏணிபடியில் **அன்னிய பாஷை** என்ற **முதல்படியை** தாண்டினால்தான் மற்ற **8 வரங்களும் செயல்படும்** என்று அர்த்தம்கொள்ளும் வகையில் எழுதி மக்களை எப்படி **திசைதிருப்புகிறார்கள்** பார்த்தீர்களா? ஜாக்கிறதையாக இருப்போம். இவர்கள் **அன்னிய பாஷையை** மக்களிடம் நுழைக்க படாத**பாடுபடுகிறார்கள்.** நானோ **வசனத்தை** மக்கள் **மனதில் பதிய** வைக்க முயல்கிறேன். பாஸ்டர் ராஜாமணி அவர்கள் துணிகரமாக கூறுவது போல கிரேக்க நாட்டிலிருந்த சபைகளில் ஒன்றுதான் **கொரிந்து சபை.** இங்கே **பல மொழி பேசின** விசுவாசிகள் இருந்தார்கள் என்று கூறுவது **வசன ஆதாரமற்றது** என்று எழுதியிருப்பதும் அப். 2ல் சீஷர்கள் **பற்பல பாஷைகள்** பேசினபோது அங்கே **இந்த பாஷைகளை புரிந்துகொண்ட எவருமே இல்லை** என்று பொய் செய்தி கூறியிருப்பதும் மனதிற்கு இவர்களைப்பற்றிய நல்ல மதிப்பில் ஒரு கறைபட்டதுபோல் இருக்கிறது. எதற்காக இப்படி துணிகரமாக பொய் பேச வேண்டும் என்பது என்னை மிகவும் வேதனைப்படுத்தியது.

சகோ **ஸ்டான்லி,** பாஸ்டர் **ராஜாமணி.** பாஸ்டர் **ராஜன்** இவர்கள் யாவருக்கும் ஒரு பயம் உண்டாகிவிட்டது. மக்களுக்கு அன்னிய பாஷையில் இப்போது விழிப்புணர்வு உண்டாகிவிட்டது. **அன்னிய பாஷையை** பேசுபவர்களின் வாழ்க்கையை பார்கிறார்கள். பாஸ்டர்மார் பொய்யான பாஷை என்ற பெயரில் அவர்களின் உளரல்களை பார்கிறார்கள்.

ஆகவே முழு பெந்தேகோஸ்தே சபையில் உள்ள பாஸ்டர்களின் மனைவிமார் முதலில் சந்தோஷப்பட ஆரம்பித்துவிட்டனர், இப்போது சபையில் உள்ள பெரும்பான்மையோர் ஆராதனையில் பேசப்படும் அன்னிய பாஷை உளரல்களை சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டனர்.

**செத்த சபை** என்று இவர்கள் குறிப்பிடும் சபைகளைவிட **அன்னிய பாஷை** பேசும் சபைகளின் செயல்பாடுகளில் **பரிசுத்தம் இல்லை. மாயமாலம்** மிகுதியாக உள்ளதையும் பண விஷயத்தில் உள்ள ஏமாற்று இவைகளை கண்ட பெந்தேகோஸ்தே சபைகளிலுள்ளவர்கள் ஏராளமானவர்கள் சபையைவிட்டு விலகி **செத்த சபை** என்று இவர்கள் வர்ணிக்கும் மற்ற சபைகளுக்கு திரும்புகிறதை கண்கூடாக காண்கிறார்கள்.

## பாளையம்கோட்டை AOG சபை ஊழல்

▣ 2016 ஜூலை மாதம் **பாளையம்கோட்டை** சமாதானபுரம் AOG சபையின் தலைமை பாஸ்டர் அவர்களைப்பற்றியும், அவர்களின் மருமகனாகிய பாஸ்டர் ஆகிய இவர்களின் **பண ஊழல்களை** பட்டியலிட்டு AOG தலைமைசபை நிர்வாக குழுவிற்கு பல புகார்களைஅனுப்பி நடவடிக்கை எடுக்காததால் **நீதிமன்றம் நாடி செல்ல ஏற்பாடுகள்** நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சபைக்கு வரும் பெண்கள் விஷயத்தில் **பரிசுத்தம் இல்லாதது.** இவைகளை இந்த சபையினர் எனக்கு பட்டியலிட்டு எழுதியுள்ளதை பார்த்தால், எனக்கு இவ்விவரங்கள் எழுதிய நபரும் இந்த **பாளையம்கோட்டை பாஸ்டர்** சபையினர் **அனைவரும்** இதுவரை சபையில் பேசிய **அன்னிய பாஷை** ஆவியானவர் பேசியதா? **தீர்க்கதரிசனம்**

ஆவியானவர் கூறியதா? என்று சந்தேகம் அந்த சபை மக்களுக்கு எழுந்தால் நிச்சயம் சபை மக்கள் **பாஷை பேசுவதை** நிறுத்தி **வசனத்துக்கு** திரும்ப நல்ல வாய்ப்புண்டு.

பாளையம்கோட்டை AOG சபையில் இப்படிப்பட்ட **மாயமாலங்களை** கண்ட பலர் குறிப்பாக **Dr.லாரன்ஸ்** என்பவர் உள்பட சுமார் 18 பேர்கள் **CSI சபைகளுக்கு** சென்று சபையில் இணைந்துவிட்டனர் என்ற செய்தி பெந்தேகோஸ்தே சபை மக்களுக்கு ஒரு **விழிப்புணர்வு** உண்டாக்குவதாக. இந்த பிரச்சனைக்கு காரணமே எங்கள் சபையில் இங்கு பேசப்படும் **பொய் பாஷைதான்** என்று ஏககுரலில் இந்த சபையில் உள்ள வாசகர்கள் பேசுகிறார்கள்.

# குளச்சல் AOG சபை AIADMK கட்சியின் அம்மா ஆசீர்வதத்தை தேடுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் **குளச்சல்** என்னும் இடத்தில் **பாணட்டிவிளை** என்ற இடத்தில் உள்ள AOG சபையின் **35வது வருட சபைநாள் சபை விழாவை விளம்பரப்படுத்த** அச்சடிக்கப்பட்ட **வால்போஸ்டர்** ஒட்டப்பட்டது. அதில் மாண்புமிகு தமிழகமுதல்வர் புரட்சி தலைவி அம்மா **அவர்களின் ஆசீர்வாதத்துடன்** 35வது சபை நாள் விழா 7 ஆகஸ்ட் 2016 ஞாயிறு காலை 10-00 ஆராதனை நடத்தப்படும் என்று எழுதப்பட்டு, **விசேஷ தேவ செய்தி சிறுபான்மையினர் சபை பிரிவு தலைவர்** என்று எழுதி இப்படிக்கு **தலைமை பாஸ்டர் டி. கிறிஸ்டோபர் அருள்குமார்** M.A.,M.A., என்று குறிப்பிட்டு அனைத்து சபையினரையும் அழைக்கிறோம் என்று அந்த வால் போஸ்ட்டில் குறிக்கப்பட்டுள்ளது.



**கிறிஸ்துவின்** திருச்சபையை **ஆசீர்வதிக்க இயேசு கிறிஸ்து வேண்டாம், ஆவியானவர் வேண்டாம். மாண்புமிகு முதல்வர்.ஜெயலலிதா அம்மா அவர்களின் ஆசீர்வாதம் இருந்தால் போதும்.** AOG சபையினரின் **அன்னிய பாஷையின் வல்லமை,** சபையின் **ஆசீர்வாதத்துக்கு** யாருடைய ஆசீர்வாதத்தை எதிர்பார்க்கிறது என்று கவனித்தீர்களா? இது **மாயமாலம்** அல்லவா. AOG சபைகள் எங்கே பயணிக்கிறது?.

# தொலைபேசி மிரட்டல்:

**குறிப்பு :** ஜூலை மாதம் 27ம் தேதி புதன் இரவு திடீரென குளச்சல் AOG **சபை பாஸ்டர்** எனக்கு தொலைபேசியில் பேசினார். ஆரம்பத்தில் பேசும்போது என்னை மிரட்டுவதுபோல் பேசினார். மிகவும் **கோபத்தோடு** பேசினார். அவர் பேசியதாவது நாங்கள் ஒட்டிய **வால் போஸ்டை** எங்கள் அனுமதி இல்லாமல் நீங்கள் ஏன் உங்கள் **வாட்ஸ்அப்பில்** வெளியிட்டீர்கள் என்றார். தம்பி எனக்கு **WatsAppம் இல்லை, Face Bookம் இல்லை.** பின் எப்படி உங்கள் **வால்போஸ்டை வெளியிடுவேன் என்று பாஸ்டரிடம் கூறினேன்.** நீங்கள் பேசி கொண்டிருக்கும் 10 நிமிடத்துக்கு முன்தான் ஒருவர் எனக்கு e-mail மூலம் **உங்கள் வால்போஸ்ட்** படத்தை எனக்கு அனுப்பி இருக்கிறார்கள். அதை பார்த்து வெட்கப்பட்டேன். நானே உங்களை அழைத்து இப்படிப்பட்ட சாட்சி அழைப்பு **வால்போஸ்டை** எந்த **ஆவியானவர்** அச்சடித்து விளம்பரப்படுத்த சொன்னார். கொஞ்ஜமாவது **தேவ பயம்** உங்களுக்கு இல்லையா? என்று உங்களையே அழைத்து நான் கேட்க நினைத்தேன். ஆனால் அதற்குமுன் **நீங்களே** தொலைபேசியில் என்னை அழைத்தது நல்லது என்றேன். எனக்கு **WatsApp., Face Book** எதுவும் இல்லை. மேலும் மொபைல் இல்லாத ஒரே ஊழியன் நான் என்பதை பாஸ்டர் அறிந்துகொண்டபின் அவரின் கோபம் தணிந்தது.

### குளச்சல் AOG சபை பிரச்சனை என்ன ?

இங்கு AOG சபை **ஜெப வீடாக** தொடங்கப்பட்டது. **வீட்டில்** ஆரம்பித்த **சபை** பெரிய கட்டிடமாக **அரசாங்க உத்தரவு இல்லாமல் கட்டிமுடித்துவிட்டனர். இதற்கான** கட்டிட **வரைபட அனுமதியும் இல்லாமல், தீ அணைப்புத்துறையினரின் அனுமதி இல்லாமல், முக்கியமாக கலெக்டர் அனுமதி இல்லாமல்** பாஸ்டர் அவர்கள் கட்டிடம் கட்டி முடித்துவிட்டார். அதுதான் இப்போது பூதாகரமாக வெடித்துள்ளது.

இப்போது போலீஸ் பாஸ்டரை அழைத்து ஸ்டேஷனில் வைத்து விசாரித்தது. இப்போது AOG சபை மூடப்பட்டது. இந்த விஷயத்தில் AOG தலைமை இதில் தலையிடவில்லை என்பது இவரின் குற்றச்சாட்டு ஆகும். முறைப்படி அரசாங்க சட்டப்படி அரசாங்க அனுமதிஇல்லாமல் பாஸ்டராக சபை கட்டிடத்தை துணிந்து கட்டிமுடித்துவிட்ட கட்டிட பிரச்சனைக்கு AOG தலைமை எப்படி தலையிடும்? நியாயம் வேண்டாமா?

இதுபோலவே ஏராளமான **பெந்தேகோஸ்தே சபைகள்** லட்சக்கணக்கில் செலவு செய்து கட்டிடம் கட்டி **ஆராதிக்க முடியாமல்** அரசாங்கம் **சீல் வைத்துவிட்டது.** இப்போது கட்டிய குளச்சல் AOG சபையும் சீல் வைக்கப்படும் அல்லது புல்டோசர் வைத்து இடிக்கப்படும். இப்படிப்பட்ட சட்ட மீறுதலுக்கு கர்த்தரும் உதவி செய்யமாட்டார். AOG தலைமையும் தலையிடாது என்று நினைக்கிறேன். இதுதான் குளச்சல் AOG சபையின் பிரச்சனையாகும். இதைவிட

இவர்கள் வெளியிட்ட வால்போஸ்ட்டும் **அம்மா ஜெயலலிதா** அவர்களின் **ஆசீர்வாதம்** கோரும் வாசகமும் சாதரண **பெயர் கிறிஸ்தவனும்** செய்யமாட்டானே!.

குளச்சல் AOG சபை பாஸ்டர் அவர்கள் தன் தவறை உணர்ந்து கர்த்தரிடமும். அரசாங்கத்திடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

‘ கிறிஸ்தவ தேவனுடைய பிள்ளைகள் **தமிழக முதல்வர்** அவர்களுக்காக ஜெபிக்க **கடமைப்பட்டிருக்கிறார்கள்.** வேதமே அதை நமக்கு கட்டளையிட்டுள்ளது. 1 தீமோ. 2:1-4. ஆனால் பெந்தேகோஸ்தே பாஸ்டர் அதுவும் டபுள் M.A. பட்டம் பெற்றவர் **கிறிஸ்துவ சபையை** ஆசீர்வதிக்க **முதல்வர் அம்மாவின் ஆசியை** தேடலாமா? அப்போது இயேசு கிறிஸ்துவுக்கு சபையில் கொடுத்துள்ள **ஸ்தானம்** என்ன ? - வெட்கப்படவேண்டிய செய்தியுமாகும்.

## கொரியா தலைமை AOG சபையின் உலக மகா பண ஊழல்

**10 லட்சம் நபர்கள் அங்கத்தினராக உள்ள உலகின் மிகப் பெரிய AOG சபை பாஸ்டர் பால் யாங்கி-சோ** அவர்களும் ஜெயிலில், அவரின் **மகனும்** ஜெயிலில். இந்த செய்தி **பழைய செய்திதான்** ஆனால் **அன்னிய பாஷை**பற்றியும், அதன் மாய்மால சிறப்பு பற்றியும் ஜாமக்காரனில் இப்போது நான் எழுதும்போது இதுவும் எனக்கு ஞாபகத்தில் வந்தது. அதை உங்களுக்காக குறிப்பாக பெந்தேகோஸ்தே சபை விசுவாசிகளுக்கு இவைகளை ஞாபகப்படுத்தாமல் இருக்ககூடாது.

**120 கோடி டாலர்** பணத்தை மக்கள் **காணிக்கையை பாஸ்டர்.பால் யாங்கி சோ அவர்கள்** (Share) **ஷேர் மார்க்கெட்டில்** டெபாசிட் செய்துவிட்டார். 10 லட்சம் எண்ணிக்கையுள்ள கொரிய சபை மக்களுக்கு அதன் சேரை **வெளிமார்கெட்டை** காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாக பணம் கொடுத்து சபை மக்களை Share வாங்க கட்டாயபடுத்தியிருக்கிறார். இப்போதுதான் **அன்னிய பாஷை** பேசுவதிலிருந்து மக்கள் விழித்துகொண்டனர். **பால் யாங்கி-சோவையும் மகனையும்,** AOG சபை அங்கத்தினர்களே போலீசில் ஒப்படைத்தனர். **அன்னிய பாஷை** பேசிக்கொண்டே காணிக்கை பணத்தை **வட்டிக்கு விட்டவர்** அதுவும் தன் **சொந்த மகனை** ஊழியத்தோடு சேர்த்து அந்த வியாபாரத்தை செய்ய கட்டளையிட்டவர். (தமிழ்நாட்டில் கிறிஸ்தவ ஊழியம் **காருண்யா கல்லூரியாக** மாறியதைப் போலாயிற்று.)


பால் யாங்கிசோ எத்தனையோ பேரை **அபிஷேகத்தில்** வழிநடத்தியிருப்பவர் உலகம் முழுவதும் பிரபல பிரசங்கியாக திரிந்தவர் **அன்னிய பாஷையை** கற்பித்தவர். **அன்னிய பாஷை** என்ற **போலியான உபதேசம்** இவர்கள் எல்லாரையும் தவறான வழியில் நடத்தியிருக்கிறதே! பால் யாங்கிசோ அவர்கள் மக்களுக்கும் கிறிஸ்துவுக்கும் பெரிய **அவமானத்தை** கொண்டுவந்துவிட்டாரே!.

கொரிய AOG சபையினர் வெளியில் தலை காட்டமுடியவில்லை. ஜெயிலிருந்து வெளியே வந்தவுடன் பெயரை மாற்றிக்கொண்டு இப்போது அவர் **பால் யாங்கு-சோ** அல்ல **டேவிட்** என்ற புதிய பெயரில் அவர் புது **பாஸ்போர்ட்** வாங்கி மீண்டும் ஊழிய பயணம் செய்கிறார்.

## தமிழ்நாட்டு AOG சபை தலைமை ஊழல்

பாஸ்டர் **அருள்** அவர்கள் பாஸ்டர் **ராஜாமணி,** பாஸ்டர் டி. **மோகன்** இன்னும் சிலரைப்பற்றி துண்டுபிரதி வெளியிட்டதாக கேள்விப்பட்டேன். அதில் இவர்களின் சாட்சியில்லா **பிரச்சனைகளை** வெளியிட்டிருக்கிறார். பலர் எனக்கு அதை வாசித்து காட்டினர். அந்த துண்டுபிரதிகளை அனுப்ப கேட்டிருக்கிறேன். AOG சபைகளின் தலைமையே இப்படிபட்ட ஊழலிலும் பிரச்சனையிலும் சாட்சியை இழந்துள்ளபோது எப்படி இவர்கள் **பரிசுத்தத்தை** பிரசங்கிக்கிறார்கள். ஏற்கனவே நான் எழுதியதுபோல் இவரகள் யாவரும் பேசும் **அன்னிய பாஷை** நூற்றுக்கு நூறு **பொய்யானது.** யாவும் **மாய்மாலம்** நிறைந்தது என்று நான் எழுதியது சரியா? தவறா? பெந்தேகோஸ்தே சபையில் உள்ள வாசகர்களே கூறுங்கள்.

# Rev.Dr.தியோடர் வில்லியம்ஸ் அவர்களைப் பற்றி :



ஒவ்வொருவர் அன்னிய பாஷைக்கு வக்காலத்து வாங்கி வசன ஆதாரம் இல்லாமல் பலருடைய அனுபவங்களையும், தங்களுடைய அனுபவங்களையும் குறித்து எழுதி பலர் எழுதிய புத்தகங்களை மேற்கோள் காட்டினார்களே தவிர **வேத வசனத்தில் ஆதாரம்** காட்டவில்லை.

அப்படி ஆதாரம் காட்டிய வசனங்களுக்கு இவர்களின் சொந்த வியாக்கியானங்களைத்தான் எழுதினார்கள். உண்மையான வசன விளக்கத்தை யாரும் எழுதவில்லை.

இவர்கள் யாவரும் குறிப்பிடுகிற வசனம் 1 கொ. 14:1,2 வரம் அடையாளம் இவைகளை என்னுடைய முடிவரையில் கூறுகிறேன்.

அதற்கு இந்த மூன்று **பிரதான பெத்தேகோஸ்தே பண்டிதர்கள்** எழுதிய கட்டுரையை பிரபல வேத பண்டிதரும் வேதாகம கல்லூரி விரிவுரையாளரும் உலகின் பெரும்பாலான நாடுகளில் பெரும் பண்டித்துவம் பெற்றவர்களின் கலந்துரையாடலில் பங்கெடுத்து பல அரிய பட்டங்களை பெற்றவருமான **Rev.Dr. தியோடர் வில்லியம்ஸ்** அவர்களிடம் காட்டி வாசித்து உங்கள் விளக்கங்களையும் விமர்சனங்களையும் ஜாமக்காரன் வாசகர்களுக்காக எழுதும்படி கோட்டுகொள்கிறேன் என கேட்டேன்.

இவர்களின் மூன்று பேர்களின் கட்டுரைகளை கொடுத்து மூன்று வாரங்களில் எனக்கு நீண்ட பதிலை கட்டுரையாக ஜாக்காரனில் வெளியிட அனுமதி தந்தார்.

Rev.Dr. தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் கட்டுரையுடன் **அன்னிய பாஷை குழப்பம்** என்ற தலைப்பில் நான் ஆரம்பித்த கட்டுரையின் முடிவை வெளியிட்டு டாக்டர் புஷ்பராஜ் ஆகிய நான் இதன் முடிவுரையை அடுத்த செப்டம்பர் மாத ஜாமக்காரனில் எழுதி முடிப்பேன். இதை அப்படியே புத்தகமாகவும் தாமதம் இல்லாமல் வெளியிடுவேன் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். சரி இனி Rev.Dr. தியோடர் வில்லியம்ஸ் எழுதியதை வாசியுங்கள்.

**BIBLE TEACHING MINISTRIES**

**Rev.Dr. Theodore Williams**

*64, Mahalakshmi Nagar. Chennai-600073 Ph.2375863*

# திருமறை காட்டும் சில உண்மைகள்

▣ திருமறையில் காட்டும் தெய்வீகம்(Godliness) என்பது தேவனோடு உள்ள உறவு சம்பந்தப்பட்டவை ஆகும். ஆதலால் **கீழ்ப்படிதல்,அவரை விசுவாசித்தல்** என்பதுதான் மிக முக்கியமானவை ஆகும்.

**கீழ்ப்படிதல்:** தேவனைக்கனம் பண்ணுவது, அவருக்குப் **பயப்படுவது.** அவருடைய **சித்தத்தை** செய்வது :

**அவரை விசுவாசித்தல்:** அவரை **சார்ந்திருப்பது** அதோடு முழுவதும் நாம் அவருக்கு இணங்கி அவர் கையில் நம்மை ஒப்புவித்து, அவர் நமக்காக செயலாற்ற எதிர்பார்ப்பது என்பதாகும். ஆனால் **இந்து மதத்தில்:** பக்தியும், தெய்வீகமும் ஒருவர் பெற்ற அல்லது பெறுகிற **பரவச அனுபவங்களாக உள்ளது.** இந்த மாதிரியான புறமதத்தினரின் **பரவச அனுபவங்கள்** எப்படியோ, இதுவரை கட்டுரை எழுதிய மூவரின் சபைகளிலும், இவர்கள் தனிப்பட்ட அனுபவங்களிலும் நுழைந்துவிட்டது. துக்கமான விஷயமே?

**வெளிப்பாடுகள், தரிசனங்கள்: இயற்கைக்கு** அப்பாற்பட்டு **மனிதரைப் பிரமிக்க** வைக்கும் **அனுபவங்கள், செயல்கள்** இவற்றை சார்ந்தவை ஆகும். உதாரணம் : **சாய்பாபா,** முக்தானந்தா, ராமகிருஷ்ணர், கிறிஸ்தவ வேதத்தில் **சீமோன்** (அப். 8) ஆகிய உதாரணமாக கூறலாம்.

## கிறிஸ்தவ பக்தி என்பது வித்தியாசமானதாகும்:

ஆதலால் **கிறிஸ்தவ பக்திக்குத்** திருமறையைப் படித்துக் கடவுளின் **கட்டளைகளையும், வழிகளையும், சித்தத்தையும்** அறிதல் மிக அவசியம் ஆகும். இவைகளுக்குத்தான் கிறிஸ்தவர்கள் **முக்கியத்துவம்** கொடுக்கவேண்டும். இந்த திருமறை (வேத வசனம்) வழியில்தான் நாம் **பக்தி விருத்தியடைய** முடியும்.

❽ **சகோ. ஸ்டான்லியும்** மற்றவர்களும் சொல்வதுபோல் **அந்நிய பாஷையில்** பேசுவதாலோ, **பரவச அனுபவங்களாலோ பக்தி விருத்தியடையவே முடியாது என்று திட்டவட்டமாக கூறுகிறேன். பேதுரு, யோவான், யாக்கோபு, யூதா** ஆகியவர்கள் பக்தி விருத்திக்காக **அந்நிய பாஷையில் பேச வேண்டுமென்று** ஏன் கூறவில்லை? பேதுரு நாம் யாவரும் வேத **வசனத்தில்தான் ஆவியில் வளருவோமென்று** தெளிவாகக் கூறுகிறார். (1 பேதுரு 2:23)

▣ சமாரியர்கள் **அந்நிய பாஷையில்** பேசினார்களென்று கூறப்படவில்லை. **பவுலும்** அன்னிய பாஷை வரத்தை பெற்றிருந்தானேயொழிய அதை அவன் **அடையாளமாக** பெறவில்லை என்பதை கவனிக்க வேண்டும்.

▣ ரோம. 8:26ல் குறிப்பிட்ட வசனத்தில் "வாக்குக்கடங்காத பெரும் மூச்சுகளோடு என்று குறிப்பிட்டுள்ளது, **அன்னிய பாஷையில்** ஜெபித்தல் என்று அர்த்தம் அல்ல. அப்படி வேதத்தில் எழுதப்படவும் இல்லை. அன்னிய பாஷையில் பேசாத விசுவாசிகளும் இவ்விதமாக ஜெபிக்கும் அனுவத்தை பெற்றிருக்கிறார்கள் என்பதை அறியவேண்டும்.

▣ TPM **பாஸ்டர் ராஜன்** அவர்களின் விமர்சனத்தில் (பக்கம் 2) பாஸ்டர் அவர்கள் சுட்டிக்காட்டி எழுதிய எபேசி 1:13 KJV வேதாகம மொழிபெயர்ப்பு (After that Ye Believed) என்பது சரியான மொழிபெயர்ப்பல்ல. (Having Belived) **விசுவாசித்த பொழு**து என்பதுதான் சரி.

ஒரு சந்தேகமுள்ள விஷயத்தின் **சரியான அர்த்தத்தை** அரிய வேண்டுமானால் கூடியவரை **எல்லா மொழிபெயர்புகளையும் ஒப்பிட்டு பார்த்து மூல மொழியில்** என்ன சொல்லியிருக்கிறது என்பதையும் பார்க்க வேண்டியது அவசியம். அப்போதுதான் சரியான **அர்த்தத்தை** விளங்கிக்கொள்ளமுடியும். மூல மொழி **அகராதியில்** ஒரு குறிப்பிட்ட **வார்த்தைக்கு மூன்று அர்த்தங்கள்** கொடுக்கப்பட்டிருக்கும் என்பதை கவனித்து அந்த பதத்துக்கு சரியான வார்த்தையை தேர்ந்தெடுத்து பொருத்தி அர்த்தம்கொள்ள வேண்டும்.

= (பக்கம் 3ல்) இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் யாவருக்கும் பரிசுத்த ஆவி உண்டு **என்பது தவறு** என்பதாக **பாஸ்டர் ராஜன்** அவர்கள் எழுதியுள்ளார்.

**பாஸ்டர்.ராஜன் அப்படி கூறுவது மிகமிக தவறு** ரோம 8:9ல் **தேவனுடைய ஆவி உங்களில் வசமாயிருந்திருந்தால் நீங்கள் மாமிசத்துக்கு உட்பட்டவர்களாக இராமல் ஆவிக்குட்பட்டவர்களாய் இருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல** என்று மிக தெளிவாக கூறப்பட்டுள்ளது. பாஸ்டர் அவர்கள் வேதவசனத்தை **மிக தவறாக** உபயோகிக்கிறார்.

**இயேசு** உள்ளத்தில் வருவதும் **ஆவியானவர்** உள்ளத்தில் வருவதும் ஒன்றுதான். அதோடு **பிதாவும் கூட** நமக்குள் வருகிறார். (யோ .14:23,24)

= (பக்கம் 3ல்) இயேசுவானவர் சீஷர்கள்மேல் **தம் ஆவியைத்தான் ஊதினார். அது பரிசுத்தாவியை அல்ல! என்று பாஸ்டர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது மிகவும் தவறு. கிறிஸ்துவின்** ஆவிதான் **பரிசுத்தாவியானவர்** ஆகும். ரோ. 8:2ம் வசனத்தை பாஸ்டர் அவர்களை எடுத்து வாசிக்க சொல்லுங்கள்.

= மேலும் அதே பக்கத்தில் **சீமோன்** என்பவன் பணத்தினால் பெற நினைத்தது **அன்னிய பாஷை** அடையாளத்தோடு உள்ள பரிசுத்தாவி என்று பாஸ்டர் குறிப்பிட்டுள்ளார், இது முற்றிலும் தவறு. அப்படி **வேதத்தில் எழுதப்படவே இல்லை.** எழுதப்படாத வசனத்தை இவர்கள்ஏன் இப்படி மாற்றி,திரித்து மக்களை குழப்புகிறார்கள் **!**

**சீமோன்** பணத்தினால் பெற நினைத்தது பரிசுத்தாவியின் **வல்லமையைதானே** தவிர **அன்னிய பாஷையை** அல்ல. ஏற்கனவே இந்த சீமோன் **மாய வித்தைகாரனாக** ஏமாற்றி பணம் சம்பாதிப்பதை கவனிக்க வேண்டும். தன் மாய வித்தைக்கு இந்த **வல்லமை** இருந்தால் மக்களை இன்னும் ஏமாற்றி பணம் சம்பாதிக்க நினைத்தான். **அன்னிய பாஷையை** பெற்றுக்கொள்ள அவன் விலை பேசவில்லை.

= பாஸ்டர் சபை விசுவாசிகளாகிய உங்களை நோக்கி **அன்னிய பாஷையில்** பேசுங்கள் என்று சொன்னால், **பேசுகிறீர்கள்! நிறுத்துங்கள்** என்று சொன்னால் **நிறுத்துகிறீர்கள்.** ஆகவே பரிசுத்தாவியானவராலேயே நீங்கள் (ஜனங்கள்) பேசவில்லை. **பாஸ்டர் கட்டளை இடுவதால் மட்டுமே** பேசுகிறீர்கள் என்று **ஜாமக்காரனில்** குறிப்பிட்டது தவறு என்று பாஸ்டர் ராஜன் அவர்கள் எழுதியுள்ளார். மேலும் பாஸ்டர் ராஜன் அவர்கள் ஆராதனை நடத்தும் பாஸ்டருக்குள் இருக்கிற **ஆவியானவர்** அவர் மூலம் **நிறுத்த** சொல்கிறார். **பேச** சொல்கிறார் அதனால் ஜனங்களும் செய்கிறார்கள் என்று பாஸ்டர் கூறியுள்ளார்கள். மேலும் இதிலே தவறு என்ன இருக்கிறது என்று பாஸ்டர் ராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

= வேதத்தில் எங்காவது **பேதுருவோ** (அப். 10) **பவுலோ** இப்படி **பேச சொல்கிறார்களா?** அப் 19:1. கொரி 14 ஆகிய இந்த வேத பகுதிகளிலும் எங்கும் இப்படி சொல்லப்படவில்லையே**!** வேதத்தில் எங்கும் கூறப்படாததை **தன் சொந்த அனுபவத்திலிருந்து இந்த பாஸ்டர்** கூறுகிறார்**!** இது ஆபத்து**!**

= பாஸ்டர் ராஜன் அவர்கள் எழுதிய விமர்சனத்தை வாசிக்கும்போது அவருக்கு வேத வியாக்கியானத்தில் பல குழப்பங்கள் காணப்படுகிறது என்பது மிகத் தெளிவாக அறிய முடிகிறது. இவர் எல்லா **மொழிப்பெயர்ப்புகளையும்** படிக்க வேண்டும் அல்லது **மூல மொழிகளையாவது** இவர் நன்றாக அறிந்திருக்கவேண்டும். அதன்பிறகு மற்றவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்.

▣ **பாஸ்டர் ராஜமணி** புதிய ஏற்பாட்டில் அன்னிய பாஷைகள் பேசப்பட்ட 3ம் இடம் குறிப்பிடுகிறார்.1) எருசலேம் அப். 2:4, 2) செசரியா 10:45 3) எபேசு 19:16 இந்த மூன்று இடத்தில் பேசப்பட்ட அன்னிய பாஷையில் ஒவ்வொன்றிலும் **வேறுபாடுகள் உண்டு.**

= அப்.2ல் திட்டவட்டமான மொழிகளில் **அந்தந்த மொழிக்குறியவர்கள்** புரிந்து கொள்ளதக்கதாக தேவனுடைய மகத்துவமான செயல்களை சொன்னார்கள் என்று தெளிவாக எழுதியிருக்கிறது. தேவனுடைய மகத்துவமான செயல்கள் என்றால் என்ன ? அது கிறிஸ்துவின் **மரணம். உயிர்த்தெழுதல்** என்பவைகளாகும்.

= எபேசுவில் ஞானஸ்நானம் பெற்ற சீடர்கள் யாவரும் **யோவான்** ஞானஸ்நானத்தை பெற்றிருந்தார்கள். அவர்கள் யாவரும் பரிசுத்தாவியானவரைபற்றி அறிந்திருக்கவில்லை. ஆக **பாஸ்டர் ராஜாமணி** அவர்கள் ஒரு விஷயம் மூன்று சாட்சியங்களால் உறுதிப்படும் என்று எழுதியது போல, சகல காரியங்களும் உறுதிபடுத்த பயன்படும் மூன்று **சாட்சியங்களாக ராஜாமணி அவர்கள் இந்த மூன்று இடங்களையும் ஒப்பிடுவது பொருந்தாது.** ஒவ்வொரு இடங்களிலும் பேசப்பட்ட அன்னிய பாஷையின் **வேறுபாடுகளை** கவனிக்க சொல்லுங்கள்.

= பவுல் **அதிகமான பாஷைகளை பேசியதாக குறிப்பிடும்** விஷயத்தில் பவுல் அன்னிய பாஷையை **அடையாளமாக** பெற்றுக்கொள்ளவில்லை. **வரமாகத்தான் பெற்றுக்கொண்டார். அடையாளம்** என்பது வேறே!. **வரம்** என்பது வேறே!.

= மேலும் அப். 2ல் பரிசுத்தாவியில் நிறைந்து பற்பல பாஷைகளில் தேவனை **புகழ்ந்து ஜெபித்துக்**கொண்டிருந்தார்கள் என்றும். அவர்கள் பேசியதை மற்றவர்கள் **குடித்து, வெறித்து, கும்மாளம் போடுவதாக எண்ணினார்கள்** என்று பாஸ்டர் ராஜாமணி அவர்கள் எழுதியுள்ளார். **இது தவறு.** அப்படி வேத புத்தகத்தில் எழுதப்படவேயில்லையே. இவர்களெல்லாம் வேதத்தில் இல்லாத வார்த்தைகளை, எப்படி இவ்வளவு தைரியமாக எழுதுகிறார்கள். அப்படியே பிரசங்கத் செய்கிறார்கள். இவர் எழுதியதை வாசிக்கும் யாரும் வேதத்தை திறந்து வாசிக்க மாட்டார்கள் என்று இவர் நினைக்கிறாரோ**!**

அந்த வசனங்களில் கூடியிருந்த அவர்கள் **புகழ்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தார்கள்** என்றோ 13ம் வசனத்தில் **குடித்து வெறித்து கும்மாளம்** போடுவதாக மற்றவர் எண்ணினார் என்றோ எழுதப்படவில்லையே!. ஜெபத்தில் தேவனை **புகழ்ந்து**கொண்டிருந்தனர் என்று மறுபடியும் மற்றொரு இடத்திலும் வேதத்தில் எழுதப்படாத வார்த்தையை இவர் தவறாக எழுதியுள்ளார். தயவுசெய்து அவரை அப். 2:11ஐ மறுபடியும் வாசிக்க சொல்லுங்கள்.

**கிரேக்கரும் அரபியருமாகிய நாம் நம்முடைய பாஷைகளிலே இவர்கள் தேவனுடைய மகத்துவங்களை பேச கேட்கிறோமே என்கிறார்கள்** என்று மட்டுமே எழுதியிருக்கிறது.வேதத்தில் எழுதப்படாததை எழுதியதாக கூறுவது தேவ கோபத்தை உண்டாக்கும். பாஸ்டர்.**ராஜமணி** அவர்களுக்கும்,பாஸ்டர்.**ராஜன்** அவர்களுக்கும் ஆபத்தை உண்டாக்கும்.

= ஜெப மொழியாக அன்னிய பாஷை குறிப்பிட்டுள்ளதாக வசனம் மூலம் அறியலாம் என்றும் **அனைவரும்** அன்னிய பாஷை பேசியதாக வசனம் கூறுவதாகவும் பாஸ்டர் அவர்கள் மறுபடியும் வேத வசனத்தை தவறாக குறிப்பிட்டுள்ளார். இவர் குறிப்பிட்ட வசனங்கள் பெரும்பாலும் எல்லாமே தவறாக இருக்கிறது. மேலே இவர் குறிப்பிட்டபடி ஒரு வசனமும் வேதத்தில் இல்லை **!** 11ம் பக்கத்தில் கடைசி பத்தியில் இவர் குறிப்பிட்ட 1 கொரி. 12:10 வசனத்தில் கூட இவர் குறிப்பிட்டபடி எல்லோரும் அன்னிய பாஷை பேசியதாக எழுதப்படவில்லையே? எந்த தைரியத்தில் லட்சக்கணக்கான மக்கள் வாசிக்கும் பத்திரிக்கையில் இப்படி பொய்யாக எழுதத் துணிந்தார். இவருடைய சபை விசுவாசிகளே இவருடைய தவறான விளக்ககங்களை இவர் குறிப்பிட்ட பொய்யான வசனங்களை தங்கள் வேத புத்தகத்தில் எடுத்து வாசித்தால் பாஸ்டரைப்பற்றி என்ன நினைப்பார்கள்? அந்த பயம் கூட அவருக்கும் இல்லாமல் போனதென்ன?

= 13ம் பக்கம் கடைசி பத்தியில் **அன்னிய பாஷையை** நம்பாத எந்த போதகராவது சபையாராவது தீர்க்கதரிசனம் சொல்லி சபையை **பக்தி விருத்தி** அடைய செய்கிறார்களா? என்று பாஸ்டர் ராஜாமணி அவர்கள் கேள்வியை எழுப்பியுள்ளார்.

ஆம் **அன்னிய பாஷை பேசாத** உண்மை போதகர்களின் ஊழியத்திலும் **வசன** போதனையும் **தீர்க்கதரிசன வரமும்** ஒன்றாய் செயல்படுகின்றன என்பதை பாஸ்டர் ராஜாமணி அவர்கள் அறிய வேண்டும்.

**பக்தி விருத்தி என்றால் என்ன ? பக்தி விருத்தி என்பது பரவச அனுபவங்களால் வருவதல்ல.**

யோவான், பேதுரு, யாக்கோபு, யூதா போன்ற நிருபங்களில் ஏன் **அன்னியபாஷை பற்றி** அவர்கள் ஒரு வசனத்திலும் குறிப்பிடவில்லை? யோசித்து பாருங்கள்?.

**பேதுரு தன் நிருபத்தில், வசனம் ஆவிக்குரிய வளர்ச்சியை தரும்** என்று கூறுகிறாரே. (1 பேதுரு. 2:2,3) இதுவல்லவா **பக்தி விருத்தி !**

பாஸ்டர்.ராஜாமணி அவர்கள் 14ம் பக்கத்தில் பெந்தேகோஸ்தே சபைகளை **சேராத** வேத பண்டிதர்கள் எழுதியது என்று 2 பேர்களை குறிபிட்டுள்ளார். அதில் இவர் குறிப்பிட்ட **டாக்டர் பீட்டர் வேக்னர்** என்பவர் **பெந்தேகோஸ்தே சபையை சார்ந்தவர்** என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

காரணம் நான் அவரைக்குறித்து அறிந்தவன். இவருடைய தவறான உபதேசத்துக்கு சாதகமாக டாக்டர் பீட்டர் வேக்னர் அவர்களை ஒரு **பெந்தேகோஸ்தே சபையை சாராத நபராக** பாஸ்டர் ராஜாமணி அவர்கள் ஆக்கிவிட்டார்.

▣ சகோ. **ராஜசேகர்** (பெங்களூர்) (SABC- வேதகாம கல்லூாரி ஆசிரியர்) அவர்கள் எழுதிய விமர்சனத்தில் பக்கம் 16ல் மூன்று இடங்களில் **அன்னிய பாஷை** குறித்து சொல்லிவிட்ட காரியத்தை வேத்தில் மற்ற இடத்தில் ஒவ்வொரு இடத்திலும் திரும்ப திரும்ப வரி பிசகாமல் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று எழுதியுள்ளார்.

**இவர் கூறியபடி அன்னிய பாஷை** அவ்வளவு முக்கியமானால், கட்டயமாக **எல்லா இடங்களிலும் குறிப்பிட்டுருக்க வேண்டியது.** அவசியமானதல்லவா? இவரும்பாஸ்டர் ராஜாமணி அவர்களை போல எருசலேம் செசரீயா. எபேசு ஆகிய இடங்களில் அன்னிய பாஷை பேசப்பட்டதை ஒரே மாதிரியான அனுபவம் என்று குறிப்பிட்டுள்ளார். இல்லை அவைகள் யாவும் **ஒரே மாதிரி அனுபவங்கள் அல்ல!** அந்த **மூன்று அனுபவங்களில் வேறுபாடுகள்** உள்ளன.

**(குறிப்பு:** சகோ ராஜசேகர் எழுதிய கருத்துக்களை அவர் எழுதிய மற்ற பெரும்பாலான கருத்துக்களை Rev. Dr. தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் விமர்சிக்கும்போது ஒரு பள்ளி மாணவனுக்கு ஆசிரியர் **சைபர்** மார்க் போட்டதைபோல Rev. Dr.தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் 0000 என்று எழுதி அவருக்கு 000 மார்க்கு குறிப்பிட்டு கருத்து தெரிவித்து உள்ளார் அவர் எழுதிய பெரும்பாலான கருத்துக்களுக்கு பதில் தெரிவிக்க தகுதியற்றவை என்று குறிப்பிட்டுள்ளார்.

▣ சகோ. ஸ்டான்லி அவர்கள் எழுதிய விமர்சனத்தில் பெந்தேகோஸ்தே நிகழ்ச்சியன்று **பாஷைகள் மக்களை கவர்ந்தன** என்று எழுதியுள்ளார். அவர் எழுதியது நூற்றுக்கு நூறு தவறு ! **பாஷைகள்** மக்களை **கவரவில்லை** ! அங்கு தேவனுடைய **மகத்துவங்களை** பல **பாஷைகளில்** அவர்களோடு பேசப்பட்டது. அப். 2:11. அந்த பற்பல பாஷைகள்தான் அந்த மக்களை சிந்திக்க வைத்தது. அவர்களை கவர வைத்ததும் அவைகள்தான் என்று Rev. Dr. தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் எழுதியிருக்கிறார்.

தேவனுடைய **மகத்துவங்கள்** என்பது கிறிஸ்துவின் சிலுவை மரணம். உயிர்ந்தெழுதல் ஆகியவைகள் **அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்டது** அல்லது பேசப்பட்டது அந்த வசனத்தை மறுபடியும் வாசித்துப்பாருங்கள். அடுத்தது **மாற்கு** சுவிசேஷத்தில் **நற்செய்தியை** விசுவாசிப்பவர்கள் **நவமான பாஷைகளைப்** பேசுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார் அப்படியல்ல. அந்த **நற்செய்தியை** அறிவிக்கத்தான் **இந்த வரம்** அருளப்படுகிறது என்பதை சகோ.ஸ்டோன்லி அவர்கள் புரிந்துக்கொள்ளவேண்டும்.

மாற்கு 16ல் விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளம் என்று இயேசு **நவமான பாஷையை** மட்டும் குறிப்பிடவில்லையே! அந்த வசனங்களில் குறிப்பிட்ட **மற்ற அடையாளங்களை** அன்னிய பாஷை பேசும் எல்லா விசுவாசிகளும் செய்கிறார்களா?. அந்நியபாஷையை மட்டும் முக்கியப்படுத்தி மற்ற அடையாளங்களைப்பற்றி இவர்கள் பேசுவதே இல்லை. ஆகவே **நற்செய்தியை அறிவிக்கும்** சூழ்நிலையில் **நவமான பாஷைகள்** முதல் இயேசு கூறின மற்ற எல்லா **அடையாளங்களும்** செயல்படுகின்றன.

▣ சகோ.ஸ்டாலின் அவர்களும் பக்கம் 22ல் **அன்னிய பாஷையானது** நம்மை நாமே **பக்தி விருத்தியடைய** செய்கிறதாக எழுதியுள்ளார். பக்தி விருத்தி எந்த வர்னிப்பினாலும் உண்டாவதில்லை. **வசனத்தினால் மட்டுமே பக்தி விருத்தி உண்டாகும்.** இது கீழ்படிதலுக்குறியது, உணர்ச்சிக்கல்ல.

= **அன்னிய பாஷையில்** தேவனை துதிப்பதை வேதம் ஒட்டுமொத்தமாக கன்டனம் செய்கிறதா இல்லை என்று ஸ்டேன்லி எழுதியுள்ளார். ஆனால் எந்த வியாக்கியானமும் இவர் சொல்வதை ஆதரிக்கவில்லை என்கிறேன்.

= இவரும் ரோம 8:26ல் **ஆவியானவரின் பெருமூச்சி** என்று குறிப்பிடுவதை **அன்னிய பாஷை** என்பதைப்போல் காண்பிக்கிறார். திட்டமாக அது **அன்னிய பாஷையை** குறிப்பிடுவனல்ல.

சகோ.ஸ்டான்லி பக்கம் 26ல் மாணவ பருவத்தில் பரிட்சை நாளில் கேள்விக்கு பதில் எழுதும்போது ஒரே குழப்பமாக இருந்தால் அன்று தான் செய்த சொந்த அனுபவத்தை குறிப்பிட்டு கொஞ்ச நேரம் **அன்னிய பாஷை பேசிவிட்டு** பதில் எழுததொடங்கினால் நல்ல தெளிவுடன் **பதில் எழுத முடியும்** என்று குறிப்பிட்டுள்ளார். **இவரின் இந்த அனுபவம்** முற்றிலும் உணர்ச்சிக்குறியது. ஆனால் வேதத்தின் பக்தி விருத்தி **கீழ்படிதலையும்** சித்தத்தையும சார்ந்ததாகும். ஆகவே இவரின் இந்த சொந்த அனுபவம் **கேள்விக்குறியதாகிறது.** இவருடைய இந்த அனுபவத்தை பரிட்சை எழுதும் வாலிப பிள்ளைகள் யாரும் பின்பற்றிவிடாதீர்கள்.

**Dr.புஷ்பராஜ்:** Rev.Dr.தியோடர்வில்லியம்ஸ் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார். அவர் உயிரோடு இருக்கும்போது சகோ.ஸ்டான்லி அவர்களும் தன்னுடைய வெல்லூர் Blessing கூட்டங்கள் பிரதான பிரசங்கியாராக அவரை உபயோகித்துள்ளார் என்பதை அறிவிக்கிறேன். அவருடைய வேத பாடம் மிகவும் தெளிவுள்ளது. அவர் எழுதிய புத்தகங்கள் யாவும் பொக்கிஷம் போல் சேமித்து உலகம் அறிய செய்யவேண்டும். அவர் ஊழியம் மூலமாக இன்றைக்கு எழுப்பப்பட்ட ஊழியர்கள், குறிப்பாக எழுப்பப்பட்ட மிஷனரிகள் ஏராளம். ஏராளம். அவர் வேத பாடத்துக்காக தேவனை துதிக்கிறேன்.

**ஜாமக்காரன் குறிப்பு:** **அந்நியபாஷை குழப்பம்** தலைப்பில் அந்நியபாஷை அவசியமா? என்பதைக்குறித்து இதுவரை பல பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள்,தலைவர்கள், வேதாகம கல்லூரி ஆசிரியர்கள் யாவரின் கருத்துக்களும், என் மறுப்பு விளக்கங்களையும், வசன ஆதாரத்தோடு எழுதினேன்.

கடைசியாக **Rev.Dr.தியோடர்வில்லியம்ஸ்** அவர்களும் தன் கருத்து, மறுப்பு விளக்கம் யாவையும் இரத்தின சுருக்கமாக எழுதியதை வாசித்தீர்கள்.

அடுத்த மாதம் (செப்டம்பர்) ஜாமக்காரனில் நான் வாக்களித்தபடி **பெந்தேகோகோஸ்தே சபையினர் குழப்பும்** முக்கிய வசனமான **1கொரி 14:12 வசன விளக்கத்தையும்,வரம்-அடையாளம்** ஆகியவைகளைப்பற்றியும் விளக்கி எழுதுவேன்.

' இதுவரை அந்நியபாஷையைப்பற்றி எழுதிய கருத்துக்களுக்கு, மாற்று கருத்து உண்டானால் நான் எழுதிய கருத்தில் **தவறு உண்டானால்** தாராளமாக அவைகளைச் சுட்டிக்காட்டி யார் எனக்கு எ ழுதினாலும் அது வரவேற்கப்படுகிறது. பொறுமையோடு இத்தனை மாதங்கள் இந்த குறிப்பிட்ட விஷயத்தை குறித்து வாசித்த உங்கள் எல்லாருக்கும் நன்றி கூறுகிறேன்.

**இதை புத்தகமாக வெளியடும்போது கட்டுரை எழுதியவர்களின் பெயர்கள் குறிப்பிடமாட்டாது.**

# என் வெளிநாட்டு ஊழிய பயணங்கள்:

| நாடு | தொடர்புக்கொள்ள | தொலைபேசி |
|---|---|---|
| **MALAYSIA**<br>2016 NOV 1 to 6 | Rev.HENDRY | 192224410 |
| **AUSTRALIA**<br>2016 NOV 9 to 13 | Mr.JAYAN CHRISOSTOM<br>**(MALAYALAM)** - MELBOURNE | 409809002 |
| 2016 NOV 17 to 20 | Bro.VINO APPATHURAI<br>(**TAMIL)** - MELBOURNE) | EMAIL.<br>VINOJIT@YAHOO.COM.AU |
| 2016 NOV 23rd to 29th | Bro.JOHN CUMARASAMY<br>(**TAMIL**) - SYDNEY | +6148962911<br>EMAIL-JCMARASAMY<br>@OPTUSNET.COM.AU |

**குறிப்பு: தனிப்பட்ட ஆலோசனைக்கும்**(Councilling)**,ஜெபத்துக்கும் வேத வசன சந்தேகங்கள் கேட்பதற்கும், மேலே குறிப்பிட்ட தொலைபேசியில் உள்ள நபரோடு தொடர்புக்கொண்டு நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் நாள்,நேரம் ஆகியவைகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.**

# நம் தேவனுக்கு பெயர் உண்டா?

**SELECTED**

வானத்திலேயும்,பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும், அநேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. 1கொரி 8:5-6. இந்த தேவனுக்கு பெயர் உண்டா? இது கேள்வி. ஆம் என்று சொல்லி, அந்தப் பெயர்தான் **"இயேசு"** என்று சொல்லும் சபையும் உண்டு. அந்த பெயர்தான் **"யோகோவா"** என்று சொல்லும் சபையும் உண்டு. ஆனால் நீதி 30:4ல் உள்ளதைப் பாருங்கள். **"அவருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன? அதை அறிவாயோ?"** அப்படியானால் தெரியாதா? அல்லது சொல்லப்படவில்லையா?

நமது பழைய ஏற்பாடு புத்தகம் **எபிரேயு மொழியில்** எழுதப்பட்டது. **எபிரேயு மொழி** பேசும் இஸ்வேலர்களும், அவர்களைச் சுற்றியுள்ள புறஜாதியாரும், தேவனை **"ஏல்"**(EL) என்ற பெயராலேயே அழைத்தனர். அதன் பொருள் **"வல்லமையுள்ளவர்"** என்பதாகும். **இயற்கைக்கு அப்பாற்றப்பட்ட ஒரு பெரிய சக்தி** என்ற எண்ணத்தில் அப்படி அழைத்தனர். நமது திராவிடர்கள்கூட **வல்லமையை-சக்தியை** வைத்துத்தானே,**ஐம்பெரும் பூதங்களை** வணங்கினர்.

இதனால்தான் மோசேயும் ஆதி 1லிருந்து இந்த பெயரிட்டே அழைத்தான். மோசே, **"ஏல்"** என்று எழுதாமல் **ஏலோஹிம் -God - தேவன்"** என்று எழுதுகிறார். **ஆபிரகாம்**காலம் வரை இப்படித்தான் மக்கள் அனைவரும் அழைத்தனர்.

**ஏலோஹிம்** என்றால் இரண்டுக்கும் மேற்பட்ட ஆள்தத்துவமுள்ள **ஒரே தேவன்** என்பதாகும். இதை **பன்மையில் ஒருமை** என்று கூறலாம். இந்த பெயரைத்தான் முதலில் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினார்(எல்ஷடாய் ஆதி 17:1). ஏன் **"ஏல்"** என்று மட்டும் ஆபிரகாமுக்கு கர்த்தர் வெளிப்படுத்தவில்லை?

**ஏல் என்ற பெயர் உலகில் எல்லா தெய்வங்களுக்கும் இருப்பதால், அந்த எல்லா தெய்வங்களைகாட்டிலும் இவர் "சர்வ வல்லமையுள்ள தேவன்" என்பதை சுட்டிக்காட்டவே அப்படி சொல்லப்பட்டது.**

மற்ற **உலக தெய்வங்களிலிருந்து வித்தியாசம் வேண்டும்** என்பதாலேயே **"எல்எலியோன்"** (உன்னதமான தேவன்- ஆதி 14:18).

**"எல்ஓலம்"**(சதாகாலமுள்ள தேவன்- ஆதி 21:33). **"எல்ஜிப்பார்"**(வல்லமையுள்ள தேவன்-ஏசா 9:6) என்றெல்லாம் நம் தேவனை அழைத்தார்கள் என அறிகிறோம். **கிரேக்க பாஷையில் "ஏல்"** என்பது **"தியோஸ்"**(Theos) என்றழைக்கப்படுகிறது.

இந்தப்பதம் சமஸ்கிருதத்தில் **"தேவ"** என்று உள்ளது. **சமஸ்கிருதம் கலந்த நம் தமிழ்** வேதத்தில் **"தேவன்-God"** என்று எழுதப்பட்டிருக்கிறது.

# முக்கிய அறிவிப்பு:

**டாக்டர்.புஷ்பராஜ்(ஜாமக்காரன்) என்ற பெயரில் எனக்கு வாட்ஸ் அப்,பேஸ்புக் எதுவும் இல்லை. என் பெயரிலோ, ஜாமக்காரன் பெயரிலோ யாரைக்குறித்தாவது எழுதப்பட்டிருந்தால் அல்லது புகைப்படங்கள் வெளியிட்டிருந்தால் அதற்கும் எனக்கும் வாட்ஸ் அப்,பேஸ்புக்கில் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை இதன்மூலம் அறிவிக்கிறேன்.**

**அப்படி எதையாவது என் பெயரில் அல்லது ஜாமக்காரன் பெயரில் கண்டால் உடனே எனக்கு அறிவிக்கவேண்டுறேன். - டாக்டர்.புஷ்பராஜ்**

# மலேசியா:

2016 நவம்பர் மாதம் முதல் வாரம் மலேசியாவுக்கு கூட்டம் நடத்த தேதிகள் கொடுத்துவிட்டேன். மலேசியாவில் உள்ள மற்றவர்களுக்கு கூட்டம் நடத்த வேறு தேதிகள் இல்லை. மன்னிக்கவும்.

# ஆஸ்ட்ரேலியா

அப்படியே 2016 நவம்பர் மாதம் முழுவதும் ஆஸ்ட்ரோலியாவுக்கு மெல்போன் (மலையாளம் மற்றும் தமிழ்) **சிட்னி - தமிழ் கூட்டங்களுக்கு** தேதிகள் கொடுத்து முடித்துவிட்டேன். ஆகவே ஆஸ்ட்ரோலியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு தேதிகள் கொடுக்க இந்தமுறை இயலவில்லை. மன்னிக்கவும்.

இந்த குறிப்பிட்ட நாடுகளில் வாழும் என் ஜாமக்காரன் வாசகர்கள் என் கூட்டம் நடக்கும் இடங்களுக்கு நேரில் வந்து சந்திக்கவும். ஆலோசனை பெறவும், ஜெபிக்கவும் தொடர்புக்கொள்ள வேண்டிய **தொலைபேசி எண்கள் மற்றும் இமெயில் ஐடி** கொடுத்துள்ளேன் விருப்பமானவர்கள் தொடர்புக்கொள்ளலாம்.

## மொபைலில் பேலன்ஸ் இல்லாமல் என்னிடம் பேசமுயலவேண்டாம்:

பலர் ஆலோசனை கேட்கவும், வியாதிக்காக ஆலோசனை பெற்று ஜெபிக்கவும் **மொபைலில்** என்னோடு தொடர்புகொள்கிறார்கள். வேத வசன ஆலோசனைக்கூறி, வைத்திய ஆலோசனையும் கூறி மொபைல் வழியாக ஜெபிக்க தொடங்கியவுடன் அவர்களின் மொபைல் துண்டிக்கப்படுகிறது. அதை அறியாமல் முழு ஜெபத்தையும் நான் கண்ணைமூடிக்கொண்டு ஜெபித்துவிடுகிறேன். ஜெபம் முடிந்தபின் ஆமென் சொல்ல எதிர்பக்கம் சத்தம் இல்லை. பிறகுதான் எப்போதோ அவர்கள் மொபைல் கட் ஆகியிருப்பதை அறியமுடிந்தது. மன்னிக்கனும் டாக்டர், **மொபைலில் பணம்** தீர்ந்துவிட்டது. மறுபடியும் பணம்போட்டு பேசுகிறேன். தயவுசெய்து மறுபடியும் ஜெபம் செய்யுங்கள் என்று கூறும்போது எனக்கு கோபம் வருகிறது. ஆனாலும் ஊழியக்காரன் நான் கோபப்படகூடாது. ஆகவே அவர்களுக்கு ஆலோசனையாக இனி மொபைலில் பணம் இருக்கிறதா என்பதை கவனித்தபின் என்னோடு பேசுங்கள். இப்போது மறுபடியும் ஜெபிக்க இயலாது. ஜெபம் கர்த்தருடன் பேசுவது, உங்களுக்காக நான் ஜெபித்து விட்டேன். கர்த்தரும் ஜெபத்தை கேட்டார். ஆகவே இனி உங்கள் காதுகள்கேட்க ஜெபிப்பது வீண். பலர் ஜெபத்துக்காக காத்திருக்கிறார்கள் என்று கூறி தொலைபேசியை வைத்துவிடுகிறேன்.

ஆகவே தொலைபேசியில் தொடர்புகொள்கிறவர்கள் நான் மேலே கூறிய ஆலோசனையை கவனித்து என்னோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து ஜெபத்தை அலட்சியம் படுத்தும் விதத்தில் தொலைபேசியில் **பணம்(பேலன்ஸ்)** இல்லாமல் என்னிடம் பேச முயலவேண்டாம்.

# BANK ACCOUNT NUMBERS:

## Dr. M.G.E. PUSHPARAJ

SALEM -636 005. INDIA

**STATE BANK OF INDIA**(SALEM-1970)
**A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB637- 10764116842
IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM**
(SURAMANGALAM BRANCH)
**A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622.
IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

**STATE BANK OF TRAVANGORE**
(SALEM BRANCH CODE - 70328)
**A/C No: 57041760879.**
SWIFT CODE - SBTR0000328- 57041760879
IFSC CODE SBTR0000328, RBCMS BXX - 57041760879.

**SYNDICATE BANK**
(SALEM SURAMANGALAM BRANCH)
**A/C.No: 2200009312.**
SWIFT CODE - SYNBINBB027 6293-2200009312.
IFSC CODE - SYNB0006293-2200009312.

**INDIAN OVERSEAS BANK**
**SALEM MAIN**
**A/C/NO.008001000024114**
IFSC CODE – IOBA0000080

## பாரத தேசத்தின் பூரண சுதந்திரம்:



‘ நம் இந்தியா சுதந்திரமடைந்ததற்காக நம் தேவனை துதிப்போம்.

‘ இந்திய நாட்டில் எங்கும் **தீவிரவாதம், மதவாதம்,கூலிப்படைகொலையாளி** களுக்கென்று நாடெங்கும் ஒரு அங்கிகரிக்கப்பட்ட ஸ்தாபனம்போல் இரகசியமாக இயங்கும் ஸ்தாபனங்கள், **அடியாட்களுக்கென்று இயங்கும் ஸ்தாபனங்கள்** நாடெங்கும் பெருகிவிட்டன. இப்படிப்பட்ட சுதந்திரத்துக்கு எல்லையில்லாமல் போனால் நாட்டுக்கும், வீட்டுக்கும் ஆபத்தாகும். பாலர் பள்ளியில் 5ம் வகுப்பு மாணவன் சாராயம் குடித்துவிட்டு வகுப்பறை வாசலில் விழுந்துகிடக்கும் அவலம், 3வயது குழந்தைகளைகூட விட்டு வைக்காமல் கற்பழித்து கொலைசெய்து வீசிஎறியும் கொடூரம்,தேசமெங்கும் வியாபித்து பெருகிக்கொண்டிருக்கும்போது நம் முன்னோர் **பெற்றுதந்த சுதந்திரத்துக்கு** அர்த்தம் இல்லாமல்போனதே!. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பூரண சுதந்திரத்திற்காகவும், உண்மையான சுதந்திரத்திற்காகவும் கிறிஸ்தவர்கள் தினசரி ஜெபிப்பது நம்மேல் விழுந்த கடமையாகும். அவரவர் மததெய்வங்களை ஆராதிக்கும் சுதந்திரம் வேண்டும். இந்தியா எங்கும் வாழும் யாவருக்கும் மத சுதந்திரம் வேண்டும். நாம் யாவரும் **இனம்,மொழி,மதம்** ஆகியவற்றில் வேறுபட்டிருந்தாலும் நாம் யாவரும் **இந்தியர்கள்** என்ற பாசத்தோடும், கௌரவத்தோடும் வாழுவோம். ஜெய்ஹிந்த்.

**- டாக்டர்.புஷ்பராஜ்**

**AUGUST 2016**

# Printed Book/Book Post

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.